மானுடம் வாழ
மழைப் பொழிவு



செங்கண்மா

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

மானுடம் வாழ

மலைப்பொழிவு...

கவிதையில்

ஆசிரியர்

செங்கண்மாமுருகு

அறிவொளி அறக்கட்டளை வெளியீடு

160.டி.I. துக்காப்பேட்டை,
செங்கம் - 606 709.
திருவண்ணாமலை மாவட்டம்.

மானுடம் வாழ மழைப் பொழிவு...

MANUDAM VAAZHA MALAIPOZHIVU...

முதற்பதிப்பு : 1998

முதல் பதிப்பு : 1997

உரிமை : அறிவொளி அறக்கட்டளை (13/96)

வெளியிடுவோர் : அறிவொளி அறக்கட்டளை.

பக்கம்: 10 + 62

விலை ரூ: 20-00

6

அச்சிட்டோர்

ராய் கம்ப்யூட்டர்ஸ் & பிரிண்டர்ஸ்,

13/B, வாணக்காரத் தெரு,

திருவண்ணாமலை - 606 601.

✆ : 23840.

ரூ. 20

என்னிரு கண்மணிகள்
இதயத்தின் ஒலியலைகள்

அன்புத்துணைவியார், ஆருயிர்ச் செல்வன்
மார்த்தாள் முருகு   அறிவொளி

இருவருக்கும் இந்நூல்

“காணிக்கை”

செங்கண்மாமுருகு

THE ARCOT LUTHERAN CHURCH

Rt. Rev. JOHN FRANKLIN, M.A., M.Th.,
BISHOP.

Office : ALC CAMPUS
CUDDALORE - 607 001.
PHONE : 20668

Resi : D.M. BUNGALOW
NELLIKUPPAM - 607 105.
PHONE : 2295

நாள் : 21.2.97

முகவுரை

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் மனிதனுடைய ஆன்மீகத் தேவையை அறிந்து சிறந்த பக்தி நூல்கள் பல வெளிவரும் இக்காலத்தில் திருவாளர். செங்கண்மாமுருகு அவர்களின் சிந்தனையில் உருவாகி கவிதை வடிவில் ஆக்கப்பட்டுள்ள **'மானுடம் வாழ மலைப் பொழிவு'** என்னும் இச்சிறுநூல் பலராலும் பாராட்டப்படும். இறைமகன் இயேசுவின் மலைப்பொழிவை இனிய தமிழிலே உருவாக்கி இறையன்பை அனைவரும் சுவைக்கும் வண்ணம் படைத்துள்ளார். ஆசிரியருக்கு எமது பாராட்டுக்கள். இந்நூலின் வாயிலாக அனைவரும் மிக எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய நற்செய்தி கருத்துக்களைத் தமக்கே உரிய சிறந்த முறையில் வெளிப்படுத்தியிருப்பதைப் படிக்கும்போது அறிந்து கொள்ளலாம். ஆக்கியோரின் இறையன்பும், ஆற்றலும், அனுபவமும் போற்றுதற்குரியன. ஆத்துமாக்கள் பயனடைய தேவ ஆவியர் உதவி செய்வாராக !.

இந்நூலை யாவரும் மதித்து ஒப்ப என் உள்ளத்தின் முழுபிரியத்தாலும் வேண்டுகிறேன்.

இந் நூலின் வாயிலாக தமிழ்மக்கள் நீதியையும், சமாதானத்தையும் கண்டு கொள்ள இறைவனிடம் வேண்டுகிறேன்.

கல்வியாளர் திரு. செங்கண்மாமுருகு அவர்களின் இறைபணி ஓங்குக.

இவண்,

மாமறைதிரு. **ஜான் பிராங்க்ளின்,**
பேராயர்,
ஆற்காடு லூத்தரன் திருச்சபை,
கடலூர் - 607 001.

புலவர். ஜோ. தெய்வநீதி, எம்.ஏ.; எம்.எட்.; எம்.பில்.,
பொதுச் செயலாளர்.
கலை இலக்கியத் துறை,
ஆர்க்காடு லூத்தரன் திருச்சபை,

ஆய்வுரை

மானுடம் வாழ மலைப் பொழிவு! மண்ணகம் தழைக்க விண்ணகம் துறந்து மனுவுரு கொண்ட உலக இரட்சகர் இயேசு பெருமானின் அருள் நெஞ்சின் அன்புப் பொழிவு, மனித நேயத்தின் இதயத் துடிப்பு, இறைமைந்தனின் எண்ணத் தொகுப்பு, இறையரசுக்கு இனிய அழைப்பு. உலகம் போற்றும் மலைப்பொழிவு கவிஞர் செங்கண்மாமுருகுவின் காவிய உள்ளத்தில் புகுந்து கவிதை வெள்ளமாய் வெளிவந்துள்ளது.

தமிழன்னைக்குச் சூட்டப்பட்டுள்ள தெய்வமாலை இது. இனிய கவிதையில் அரிய உண்மை, இதயத் தூய்மைக்கு அருமருந்து. கவிஞரின் கவிவண்ணத்தில் கர்த்தர் இயேசுவின் கருத்துக் களஞ்சியம் கவிதைப் பூக்களாய் மலர்ந்துள்ளது.

இனிய தமிழில் இயேசுவின் நற்செய்தி கவிஞரின் முத்தான வரிகள் சில...

“தாழ்ந்திருந்த மானுடந்தான் நிமிர்ந்த தன்றோ
தலைமகனாம் தேவமகன் பிறப்பி னாலே”
‘காரிருளைப் போக்குகின்ற அருளின் எல்லை’
‘அருள்நதியைப் பிரசவிக்கும் அன்பின் குன்றம்’
‘அந்தமில் சுடரே! அருளின் திருவே!’

இப்படி இயேசுவைச் சுட்டும் எழில் ஓவியங்கள் பல நெஞ்சில் நிற்பவை.
மேலும்

“பகைவனுக்கும் அருளுகின்ற உள்ளம் வேண்டும்
பண்போடு உதவிகளைச் செய்தல் வேண்டும்
நகைமுகமாய் நிற்கவேண்டும் நன்மை செய்ய
நிந்தித்த பேரையும் வாழ்த்த வேண்டும்.”

போன்ற வரிகள் இயல்பாய் ஓடிவரும் சொல்வளத்திற்கு ஓர் உதாரணம்.

"ஆயமுதல்வன் அன்பின் தலைவன்
அறிவுமுழுக்கினை யளிப்பது உண்மை"
எனப் பாயும் பல கவிதை வெள்ளம்.

பன்னீராண்டு நோயுற்ற பெண் நலம் பெறுதல், சிறுமி ஒருத்தி உயிர் பெறுதல் போன்ற வரலாறு கூறும் போது மனம்திறந்த வெள்ளம் போல் துள்ளல் ஓசையுடன் தமிழ் மனதைக் குளிரச் செய்கிறது.

பன்னிரு திருத்தூதர் பெயர் கூறுகையில் யூதாஸை,
"வானும் மண்ணும் வணங்கும் அண்ணலை
நாண மின்றியே காட்டிக் கொடுத்த யூதாஸ்"
என்று சுட்டும் போது கவிஞரின் மனம் சிறுமை கண்டு பொங்கும் உள்ளம் என்பது புலப்படுகிறது.

"மென்முல்லை கழுத்தறுத்தான் தென்றல் காற்றின்
மேன்மையாம் குரல்வளையை நெறித்துப் போட்டான்"
என்ற கவிதை வரிகள் ஏரோதின் கொடுஞ்செயலைப் பார்க்கும் கவிஞரின் ஈரநெஞ்சம் கவிப்பூவாய் பூக்கிறது.

மகாகவியின் வண்மைத் தமிழும் புரட்சிக்கவியின் மென்மைத் தமிழும் இணைந்து கவிஞர் முருகுவின் நன்மைத் தமிழாய் மலர்ந்தள்ளது. கவிஞர் சீரிய சிந்தனையாளர், நேரிய நெஞ்சினர், எளிய வாழ்வினர், தமிழுக்குத் தொண்டு செய்ய துடிக்கின்ற மனத்தினர். படிக்கும் தொறும் இனிக்கும் இந்நூலைப் படைத்துள்ளார். கிறித்துவத் தமிழ் இலக்கிய உலகிற்கு இது ஒரு வாடா மலராகத் திகழும் என நம்புகிறேன்.

தமிழ் மணம் கமழும் இறைநெறி, இந்நூல் இயேசு பெருமானின் சீரிய வாழ்வினையும், சிறந்த போதனைகளையும் அறிய உதவுவதோடு இலக்கிய உலகிற்கு ஓர் புதிய வரவாகவும் திகழ்கிறது. இயேசு நாதர் எல்லா மக்களுக்கும் சொந்தம், அதுபோல் இந்த நூலைத் தமிழர் யாவரும் சொந்தமாக்கிப் பயன் பெற விழைகிறேன். கவிஞருக்கு என் கனிவான வாழ்த்துகள். கவிஞர் மேலும் பல அரிய படைப்புகளைத் தமிழுக்கு அளித்திட இறைவன் இயேசுவின் திருவருள் கிட்டுவதாக.

மிக்க அன்புடன்

ஜோ. தெய்வநீதி

டேனிஷ் மிஷன் மேல்நிலைப் பள்ளி,
திருவண்ணாமலை.
15.8.97

THE ARCOT LUTHERAN CHURCH, CARMEL

TIRUVANNAMALAI - 606 601.

Rev. VVJ. GURUNATHAN, M.A., B.D., M.Th.,
Pastor & Chairperson.

Date : 19.10.97

•வாழ்த்துரை•

உள்ளத்தில் எழுகின்ற மென்மையான உணர்வுகளை
வெளிக்காட்டும் விதங்களே புன்னகையும் கண்ணீரும்.
மனம் மகிழ்ந்தால் முகம் மலரும்
மனம் அழுதால் கண் நனையும்
மனம் இளைத்தால் உடல் இளைக்கும்
மனம் சோர்ந்தால் முகம் சுருங்கும்
வாய்ப் பேசும் சொற்களெல்லாம்
இதயத்தின் நினைவுகளே!

இந்நூல் கொணரும் கவிதையெல்லாம்
அன்பிற்கே அடிமையாகும்
வீர செங்கண் மாமுருகுவின்
இதயம் அசைபோட்ட உணர்வுகளின் ஒளிக்கதிரே!
அவர் இதயத்தில் ஒளிர்கின்ற
இறைமகனின் சுடர் தீபம்
என்றென்றும் ஒளிவீச
இனிதே நான் வாழ்த்துகிறேன்.

கற்பனைக் குதிரைகளை நன்றாகத் தட்டிவிட்டு
திருமறை வார்த்தைகளை அச்சாக வைத்துக்கொண்டு
நற்றமிழ் சொற்களைச் சக்கரமாய்ச் சேர்த்துவைத்து
மத்தேயுவின் நன்னூலை மையமாக எடுத்திழைத்து
எம் தலைவர் இயேசுநாதர் அருளிய மலைப்பொழிவு
இம் மானுடம் வாழ்வதற்கே என முனைந்து
இச்சிறு தேரொன்றை ஓட்டிவரும் மாவீரன்
மாமுருகின் பயணமிது!

திக்கெட்டும் பரவட்டும், தெரியாதார் அறியட்டும்
நற்செய்தி சிறக்கட்டும், இறைநெறிகள் வளரட்டும்
வாழ்க அவர்தம் வளமான தமிழ்த் தொண்டு
வளர்க அவர்தம் மேலான இறைப்பற்று

அன்புடன்

அருள்திரு. வி.வி.ஜே. குருநாதன்

நன்றி

சீராரும் லூத்ரன் திருச்சபையின் நாயகராம்
பேராயர் பெருமை சேர் அருளாளர்
பேரருட்திரு ஜான் பிராங்க்ளின் நெறியாளர்
மனமிசைந்து வழங்கிய நல் முகவுரைக்கும்
வாழ்க்கையில் உயர்வளிக்கும் அவர்தம் வாழ்த்திற்கும்
நன்றியினை
மாணிக்க எழுத்துகளால் காணிக்கை யாக்குகிறேன்

திருமறைச் செல்வர் தெய்வ நீதியாம்
ஆய்வுரை வழங்கிய அன்பின் நெஞ்சர்
அருந்தமிழ் வித்தகர் அவருக்கும் நன்றி....

இணையிலா அருள்மொழியார்
இந்நாடும் அயல்நாடும் போற்றுகின்ற
பனிமொழியார் இறைநெறியைக் கலந்தளித்து
எல்லோரின் துயர்துடைக்கும் ஏற்றமிகு அருளாளர்
எசேக்கியல் பிரான்சிஸ்
இனியவரின் வாழ்த்திற்கு என்நன்றி

நூலினை ஆய்வுசெய்து நற்கருத்துகளை
நல்கிய ஆயர்பெருமக்கள்
அருட்திரு. வி.வி.ஜே. குருநாதன், எம்.ஏ.,எம்.டிச்.,
(திருவண்ணாமலை)
அருட்திரு. ஜா. சாம்சன், பி.ஏ.,பி.டி.,
(ஆவடி - சென்னை.)
அருட்திரு. வே. கென்னடி, (சாரோன் - தி.மலை)
மற்றும்
திரு. சா. லூர்து நாதன், எம்.ஏ., எம்.எட்.,
(தலைமை ஆசிரியர் - பவித்திரம்.)
சிறந்த முறையில் அச்சிட்டு வழங்கிய
ராய் கம்ப்யூட்டர்ஸ் & பிரிண்டர்ஸ், தி.மலை.,
ஆகியோருக்கு அன்புகலந்த நன்றியினை
உரித்தாக்குவதில் மகிழ்கிறேன்.

- ஆசிரியர்.

என்னுரை

மனித வாழ்க்கை காலத்தைக் கொண்டு திட்டமிடப்படுகிறது. காலமோ அருளாளர் இயேசுநாதரின் பிறப்பைக் கொண்டு கணக்கிடப்படுகிறது. ஒவ்வொரு நொடியும் அவரின் திருப்பெயரை உச்சரித்துக் கொண்டே நகர்கிறது, காலத்தையும் தனிமனிதனையும் பிரித்துப் பார்க்க முடியுமா, தெரிந்தோ தெரியாமலோ உலகில் வாழுகின்ற அறு நூறு கோடி மக்களும், இனி வாழப் போகிறவர்களும் இயேசு வள்ளலிடமிருந்து பிரிக்க முடியாதவர்களாகி விட்டனர்.

சுருங்கச் சொன்னால் உலக மாந்தர் அனைவரும் கிறித்தவர்களே !

ஒருமுறை என் இனிய நண்பரும், நல்லறிஞருமான தமிழ் மற்றும் கன்னட திரைப்பட இயக்குநர் திரு.வி.ராஜன் (பெங்களூர்) அவர்கள் யோசேப்பு குறித்து இரு பாடல்கள் எழுதுமாறு பணித்தார். எழுதிய இருபாடல்களையும் படித்து சுவைத்தவர் என்னைப் பாராட்டி கவியரசு கண்ணதாசன் படைத்ததுபோல் நீங்களும் இயேசுபெருமானின் வரலாற்றைக் காவியமாக்க முயலுங்களேன் என்றார்.

காலத்தின் காவியம் என பெயரிட்டு எழுதத்தொடங்கினேன். ஆனால் காலம் என் வாழ்க்கையை தலைகீழாக மாற்றிவிட்டது. என் ஆருயிர் மகனை 24.12.93 அன்றும் என் அன்புத்துணைவியை 21.11.94 அன்றும் இழந்தேன். காவியம் படைக்கும் எண்ணத்தைத் துறந்து, தொடர்ந்து எழுத முடியாத மனநிலையில் அவர்கள் நினைவாக மானுடம் வாழ மலைப் பொழிவு என்ற தலைப்பில் நூலாக்கியுள்ளேன்.

இயேசுபெருமானின் பிறப்பு குறித்து இறைவாக்கினர் வழங்கிய முன்னறிவிப்பு முதல் ''வருத்தப்பட்டு பெருஞ்சுமை சுமப்பவர்களே என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் அளிப்பேன்'' வரையிலான செய்தியே இந்நூல். (மத்தேயு 1 முதல் 11 அதிகாரங்கள்)

இப்பணி குறித்து தமிழ்நெஞ்சங்களின் மேலான கருத்துகளை வரவேற்கிறேன்.

- செங்கண்மா முருகு

இயேசு பெருமான் பிறப்பு குறித்து...

ஏசாயா அருளிய இறைவாக்கு

கருணையின் எல்லையாம் இறைவன் சொல்வார்
"கட்டாயம் எமக்கொரு மகன்பி றப்பார்
திருவருளோ தோளின்மேல் நிறைந்தி ருக்கும்
தேசத்தில் அவர்பெயரோ விந்தை யாகும்
கருத்தாழம் கனிவுந்தான் அவருக் குண்டு
காப்பாற்றும் வல்லமையும் பெற்ற தேவன்
அருட்செல்வர் நிலையான அன்புத் தந்தை
ஆருயிர்க்குச் சமாதானத் தலைவர் தானே"।

"தாவீதின் அரியணையைச் செம்மை யாக்கி
திருநாட்டை வலிமையால் சீர்ப்ப டுத்தி
மேவியநல் நீதியாலும் நேர்மை யாலும்
மயங்காது நிலைநிறுத்தி காத்துக் கொள்வார்
ஆவியன்ன இறையருளோ அவர்மே லிருக்கும்
அவரிடத்தின் ஒப்புரவோ அளவே யில்லை
காவியத்தின் உயிர்மூச்சாம் கர்த்தர் தம்மின்
கட்டான மனவுறுதி செய்யு மன்றோ".

சகரியா செப்பிய திருவாக்கு.

"பாவத்தின் அழுக்குதனைப் பொசுக்கி வீட்டு
பண்புநெறி மரபுகளைப் பரப்பு கின்ற
தேவன்தன் அற்புதங்கள் நிகழும் வண்ணம்
திருக்குமரன் வந்திடுவார் உண்மை தானே।
சேவிக்கும் எருசலேமின் மக்கள் மற்றும்
தலையாய அந்நகரின் குடிக ளுக்கும்
மேவியதோர் ஊற்றொன்று திறக்கு மஃது
மேதினியைக் காக்கவல்லார் வருகை யன்றோ"।

மல்கியா வழங்கிய அருள்வாக்கு

“நீதியினை நிலைநாட்டும் தேவன் தம்மை
நீங்களெல்லாம் கேட்பீரே எங்கே யென்று
ஆதியில்லா ஆண்டவன்நான் கூறு கின்றேன்
அன்புநிறை மறையோரே செவிம டுப்பீர்
தூதுவரை எனக்குமுன்னே அனுப்பி வைப்பேன்
சிறப்புடனே வழிதன்னைச் சீர்செய் வாரே
தீதில்லா உடன்படிக்கை தூது வர்தாம்
தம்முடைய ஆலயந்தான் வருவா ரன்றோ

“ஊழிநாள்தான் வருமுன்னர் உங்கள் முன்னே
ஒப்பற்ற எலியாவை அனுப்பி வைப்பேன்
ஆழிசூழ்ந்த உலகமதை அழியா வண்ணம்
அண்ணல்தான் காப்பதுதான் உறுதி யன்றோ
பாழ்ப்பட்ட பழிநீங்கிப் போகும் வண்ணம்
பிதாக்களின் இதயத்தைப் பிள்ளை கட்கும்
தாழ்வில்லா பிள்ளைகள் இதயந் தன்னைத்
தந்தையர் திருந்திடவே திருப்பு வாரே”।

மீகா மொழிந்த இறைவாக்கு

யூதேயா தேசத்தின் இனிய ஊராம்
எழில்சிந்தும் பெத்தலகேம் என்னும் பேராம்
தீதறியா அவ்வூரின் சிறப்பு தன்னைச்
செப்புதற்குச் சொல்லில்லை யிதுவே யுண்மை
வேதமறி வீற்பனர்கள் மொழிந்த வண்ணம்
மாமன்னர் இசுரயேலில் பிறப்பார் காண்பீர்।
ஆதவனாம் பெருமகனார் எழுந்தி ருப்பார் – அவர்
ஆருயிர்க்குத் துணையாகும் ஒளியென் றாரே ।.

(வேறு)

மனிதர் செய்யும் தீவினைகள்
மண்ணைச் சுடுவது மெய்யன்றோ
புனிதரை யனுப்பிக் காப்பாற்றப்
பெரிதும் இறைவனும் விழைந்தாரே
இனிதாய் இறங்கி வந்தாரே
எம்மான் யேசு பெருமானே
கனிவுடன் அற்புதம் செய்தாரே
கண்ணாய் உலகை மீட்டாரே

பல்கிய பெருமை ஏசாயா
பன்னல இறைநிறை மீகாவும்
மல்கியா சகரியா செப்பனியா
வருவார் இறைமகன் என்றாரே
நல்கிய உரைதான் மெய்யாக
நல்லவர் வல்லவர் வந்தாரே
சொல்லறம் மிக்க சான்றோர்கள்
செப்பிய யாவும் பொய்யாமோ ?

ஏசாயா (கி.மு. 740–700) 9/6,7
மீகா (கி. மு. 742) 5/1,2
சகரியா (கி.மு. 520) 13/1
மல்கியா (கி.மு. 460) அதி. 3 /1,4 /5,6

இயேசு கிறித்துவின் பிறப்பு

தாவீதின் நன்மகனாம் யோசேப் பென்னும்
தங்கநிகர் நீதிமானாம் இளைஞ ருக்கும்
பூவிதழார் பொன்மொழியார் மரியா வென்னும்
பொற்கொடிக்கும் மணநாளைக் குறித்த பின்னர்
ஆவியினால் கருத்தரித்தார் மரியா வென்ற
அதிர்ச்சியானச் செய்தியினைக் கேள்வி யுற்றே
காவியத்து நாயகனாம் யோசேப் தானும்
கன்னிதனைப் புறக்கணிக்க யுள்ளி னாரே

மணமாகும் தருவாயில் இடிதா னொன்று
மனதினிலே இறங்கியதே ஐயோ பாவம்
குணவானோ குழப்பத்தி லாழ்ந்து விட்டார்
குறைகூற முடியாது தவித்தி ருந்தார்
மணங்கமழும் பெருமுல்லைக் கற்பின் நல்லார்
மரியாவின் மனநிலையை மொழியப் போமோ
அணங்குதனைப் புறக்கணிக்க வேண்டா மென்று – கனவில்
ஆவியாலே யோசேப்பும் ஆணை யேற்றார்॥

இறைத்தூதர் மேலுமங்கே கூற லுற்றார்
இன்னிசையா யவர்செவியில் ஓது கின்றார்
“நிறைமதியாய் மகனைத்தான் பெறுவார் மேரி
நேரியநல் யேசுவென பெயரி டுங்கள்
குறைதீர்ப்பார் அம்மகனோ குவல யத்தின்
கொடுமையாம் பாவத்தைத் தான்சு மப்பார்
கறைபட்ட உள்ளங்கள் தூய தாக
கவினுலகில் அவதரிப்பா ரறிவாய் நீயே”।

கற்புநெறி பிறழாத கன்னி தானும்
    கருவுற்று மகவொன்றை ஈன்றெ டுப்பார்
அற்புதமாம் அம்மகனாம் இம்மா னுவேலாம்
    அவ்வாறே குழந்தைக்குப் பெயரி டுங்கள்
நற்பேராம் இம்மானுவேல் என்றே சொன்னால்
    நம்மிடையே தேவனுண்டு என்ப தாகும் - வேத
விற்பனர்கள் வழியாக தேவன் சொன்ன
    விதியாவும் நிறைவேறி விட்ட தன்றோ।

ஆண்டவனின் அருள்விளங்கு ஆணை தன்னை
    அச்சமின்றி யோசேப்போ மனதிற் கொண்டு
மீண்டுந்தான் மரியாவை நாடிச் சென்றே
    வியந்திடவே நல்லியரைத் துணையா யேற்றார்
ஈண்டிங்கே யோசேப்போ புரட்சி செய்தார்
    இவ்வுலகின் வரலாற்றி லிடமும் பெற்றார்
மூண்டிருந்த துன்பமேகம் விலகிச் செல்ல
    மென்மொழியார் மகிழ்ச்சிக்கோ ரெல்லை யுண்டோ।

தாங்கிவந்த இமானுவேலாம் செல்வந் தன்னை
    தாங்கிவந்தார் மரியாவும் தளிர்வ யிற்றில்
ஓங்குபுகழ் மாமகனின் பிறப்பு மட்டும்
    உலகத்தின் கண்மணியாம் அன்னை யாரைத்
தீங்கறியா யோசேப்போ தொட்ட தில்லை
    தொடர்பேதும் ஒருநாளும் கொண்ட தில்லை
தேங்கிநின்ற துயரனைத்தும் நீங்கிப் போக
    திருவருட்கு யேசுவெனப் பேரிட் டாரே।

ஆழ்கடலில் ஆணிமுத்து வளர்வ துண்டு
அழகொளிரும் பவளமுந்தான் அங்கே யுண்டு
யாழ்குழலில் இன்னிசைதான் வளர்வ துண்டு
எல்லோரும் மயங்குகின்ற நாத முண்டு
வாழ்ந்திடவே வையமெல்லாம் மடமை நீங்கி
வளர்ந்ததம்மா நன்முத்து நீள்நி லத்தில்
தாழ்ந்திருந்த மானுடந்தான் நிமிர்ந்த தன்றோ
தலைமகனாம் தேவமகன் பிறப்பி னாலே।

பாரோரின் நினைவினிலே பசுமை யாக
பாவமென்னும் பெயரினுக்கோர் உருவ மானான்
காரான இதயத்தைக் கொண்ட வேந்தன்
கருணையாம் சொல்லறியா இழிந்த மன்னன்
ஏரோதாம் அம்மன்னன் யூதே யாவை
ஏற்றமின்றி அரசாண்ட கால மாங்கு
சீரான அறிஞரெல்லாம் தேடி வந்தார்
தேவமைந்தன் பிறப்பதனைத் தெரிந்து கொண்டே।

ஞானிகளின் வருகை

"முந்நாளில் மறையோர்கள் மொழிந்த வண்ணம்
மெய்யாக மீட்பரிங்கே தோன்றி விட்டார் – கீழை
விண்மீன்க்ள் எழுதலையே நாங்கள் கண்டோம்
நற்செய்தி தெரிவித்தால் நலமே யென்று"
பன்னூல்கள் பயின்றிட்ட அறிஞர் கேட்க
பாராளும் ஏரோதோ கலங்கி நின்றான்
அந்நாளில் சொன்னதையே நினைவு கூர்ந்து
அனல்மேலே மெழுகாகி யயர்ச்சி யுற்றான் । 9

கண்ணசைத்து விண்மீனோ வழியைக் காட்ட
கனிவுகொண்ட ஞானிகளோ தொடர்ந்து சென்றார்
பண்ணிசைத்து அவர்களுள்ளம் நடன மாட
பெருமகனார் பிறந்திருந்த குடிலை நாடி
மண்ணுலக மேத்துகின்ற மரியா தம்மை
மனதார வணங்கிவிட்டு மேலு மாங்கே
பொன்வெள்ளை போளதூப வகைகள் தம்மை
புகழ்மணக்க காணிக்கை யாக்கி னாரே ।

முதன்மைகொள் மதத்தலைவர் மற்று முள்ள
மக்களின் அறிஞரையே அழைத்த மன்னன்
“எதிர்கால எருசலேமின் கிறித்து மன்னர்
எங்கேதான் பிறந்திடுவார் சொல்வீ ரென்றான்
வீதிப்படியே பெத்லகேமில் தோன்றல் மெய்யே ”
வீற்பனர்கள் கூறுகிறோம் என்ற சொற்கள்
அதிர்வேட்டாய் அவன்காதில் வீழ்ந்த தன்றோ
ஆங்கிருந்த நகரத்தார் கலங்கி னாரே । 10

யூதேயா தேசத்தின் இனிய ஊராம்
எழில்சிந்தும் பெத்தலகேம் என்னும் பேராம்
தீதறியா அவ்வூரின் சிறப்பு தன்னைச்
செப்புதற்கு சொற்களில்லை இதுவே உண்மை
வேதமறி வீற்பனர்கள் மொழிந்த வண்ணம்
இசுரயேலை ஆள்பவரோ பிறப்பா ரங்கே
ஆதவனாம் பெருமகனார் எழுந்தி ருப்பார்
ஆருயிர்க்கு ஒளியாகும் துணையென் றாரே । 10அ

சிறுமதியோன் ஏரோதோ ஒன்று செய்தான்
திருவிளங்கு ஞானியரை அழைத்துச் சொல்வான்
" நிறைமதியாம் பிள்ளைதான் பிறந்த போது
நித்திலமாம் விண்மீன்கள் காட்சி தந்த
குறைவில்லாக் காலத்தைத் தெரிந்து நீங்கள்
கூறுவீரே பெத்தலகேம் சென்று வந்து
முறையாக வணங்குதற்கு நானும் செல்வேன்
வாக்குரைஞீர் நம்பிடுவீர் மெய்"யென் றானே ! 10அ

எதிப்திற்குத் தப்பிச் செல்லல்

தேவனின் தூதுவனோ கனவில் தோன்றி
ஏரோதைக் காணத்தான் வேண்டா மென்று
ஆவதெல்லாம அவன்செயலே அறிக வென்றார்
அருட்குழந்தை யேசுவினை வணங்கி வீட்டு
போவதென முடிவுசெய்து பயணம் செய்தார் – மறையோர்
பூரிப்பால் தம்நாடு திரும்பிச் சென்றார்
நோவெனவே கிடந்திட்ட ஏரோத் மன்னன்
நிலைகுலைந்து ஏமாந்தான் இதனா லன்றோ ! 12

சோதனைகள் வந்துற்ற காலந் தன்னில்
சோகத்தைக் கிஞ்சிற்றும் காட்டிக் கொள்ளா
மாதரசி உண்டென்றா லவரே, யெங்கள்
மண்ணுலகின் அருளன்னை மேரி யாவார்
பூதலத்தில் பிறந்திட்ட ஆண்கள் தம்முள்
பொறுமையும் பெருமையும் கொண்ட சீலர்
வேதனையைச் சாதனையாய் மாற்றிக் கொண்ட
விண்ணவரும் வணங்குகின்ற யோசேப் தானே ! 13

கொடுங்கோலன் ஏரோது மன்னன் தானும்
கொல்லுதற்கு ஏவீடுவான் குழந்தை யேசை
படுந்துயரம் அதிகரிக்கும் முன்னால் நீங்கள்
பீள்ளையுடன் எகிப்திற்குச் செல்வீ ரென்று
நெடிதுயர்ந்த தூதுவன்தான் கனவீல் தோன்றி
சூசைக்குத் தெரிவீத்து மறைந்து போக
கடிதாக புறப்பட்டார் எகிப்து நோக்கி
காவீயத்தின் நாயகனைக் காப்ப தற்கே । 14

நாடுவீட்டு நாடுவந்து நல்லோ ராங்கு
நலமாக வளமாக வாழ்ந்தி ருந்தார்
ஏடுதூற்றும் இழிமகனாம் ஏரோ தோதான்
இறக்குமட்டும் எகிப்தினீலே தங்கி வீட்டார்
“நீடுபுகழ்த் திருமகனை நைல்நாட் டிருந்து
நயமாக வரவழைத்தேன்” பார்ப்பீ ரென்றே
பாடுபுகழ் வாக்குரைஞர் வழியாய்ச் சொன்ன
படைத்தவனீன் கூற்றங்கே நிறைவே றிற்றே । 14அ

வெஞ்சினத்து ஏரோதோ கண்டு கொண்டான்
வஞ்சித்தார் ஞானிகள்தான் என்ற உண்மை
கொஞ்சுமொழி ஆண்மழலைச் செல்வங் கள்தான்
குறைவுடனே ஈராண்டு வயதி ருப்பீன்
நெஞ்சமது படபடக்க் ஆணை யீட்டான்
நீள்நிலத்தில் சிரமறுத்துப் போடு யென்றே
பீஞ்சுகளின் குருதியாலே பெத்ல கேமோ
பெருங்கறையாய் மாறியது உண்மை தானே.। 15

"புலம்பலும் அழுகையும் துக்கக் குரலும்
பண்டைநாள் ராமாவில் கேட்டார் உண்மை
கலங்கலும் கண்ணீரும் நிறைந்த ராகேல்
குழந்தைகள் காணாது கலங்க லுற்றாள்
நலம்புரியும் பிள்ளைக ளில்லை என்றே
நங்கையும் ஆறுதலோ கொள்ள வில்லை"
நிலமீது சிறந்தஇறை வாக்கி னர்தாம்
எரேமியா சொல்லிங்கு நிறைவே றிற்றே । 16

தந்தையாம் ஏரோது மாண்ட பின்னர்
தமையன்தான் அர்க்கெலாயு ஆட்சி யேற்றான்
முந்தைபோல் தொல்லைதான் நேரு மென்று
முறையாகக் கனவினிலே தெரிந்து கொண்டு–யோசேப்பு
சிந்தைகொள் கலிலேயா பகுதிச் சென்றார்
சீராக அங்கேயே குடியி ருந்தார்
விந்தையாய் இறைவாக்கு நிறைவே றிடவே
வியந்திடவே இவையாவும் நடந்த தன்றோ । 16அ

நாசரேத்துக்குத் திரும்புதல்

மென்முல்லை கழுத்தறுத்தான் தென்றல் காற்றின்
மேன்மையாம் குரல்வளையை நெறித்துப் போட்டான்
வன்னெஞ்சன் ஏரோதோ மாண்டு போனான்
வரலாற்றில் சாக்கடலாய் மாறி னானே
கண்மலராம் திருமகனை அழைத்துச் செல்ல – தூய
கட்டளையும் சூசையப்பர் பெற்ற தாலே
மென்மலராம் தன்துணையாம் மரியா வோடும்
மகவோடும் சென்றடைந்தார் நாச ரேத்தே । 17

பாசத்தின் பிடியினிலே வளர்ந்த பிள்ளை
பண்புமிகு மடியினிலே தவழ்ந்த முல்லை
காசினியில் இதற்கென்று யீடே யில்லை
காரிருளைப் போக்குகின்ற அருளி னெல்லை
யோசேப்பின் சொந்தவூராம் நாச ரேத்தில்
இருளகன்று அவர்சென்று சேர்ந்த தாலே
நாசரேயன் எனும்பெயரைப் பெற்றா ரண்ணல்
நானிலத்தில் வீசுகின்ற அன்பின் தென்றல் 18

யோவான் வருகை

விண்ணரசு நெருங்குகின்ற வேளை யீது
மனந்திருந்தி உணர்ந்துகொள்ள உரையு மாற்றி
பண்ணிசைத்து மக்கள்தம் இதயம் மாற்றி
பாவத்தைப் போக்கிடவே வழியைச் சொன்னார்
கண்ணிமையாம் யோவானாம் கனிவு மிக்கார்
காட்டினிலே யோர்தானின் கரையோ ரத்தில்
எண்ணிறைந்த மாந்தரெல்லாம் அங்கே சென்று
யோர்தானின் நீராலே முழுக்கு பெற்றார். 19

(வேறு)

திருமுழுக்கு யோவான் வழியை ஆயத்தப்படுத்துதல்

இறையருள் மிக்க யோவா னென்பார்
நிறைமதி கொண்ட நேரிய சீலர்
யூதே யாவின் பாலை வனத்தில்
பாதை வகுத்திட பணிவுடன் வந்தார் 20

ஒட்டக மயிரினை யுடையாய்த் தரித்து
வெட்டுக் கிளியும் காட்டுத் தேனும்
பட்டினிப் போக்கும் உணவாய்க் கொண்டார் 21

விண்ணவ ரரசோ அண்மை யானது
உண்மை யீதுவே உணர்வீர் மக்காள்
நன்மை விளைந்திட நாடு செழித்திட
உண்மைப் பாதை செம்மை யாகுக। 22
விரைவில் கர்த்தர் வருநா ளானது – என
உரையினில் தேனைக் குழைத்துச் சொன்னார்
வனங்களி ளெல்லாம் எதிரொ லித்தது
வணங்கிடும் தேவனின் வல்லமை தெரிந்ததே 23
எருசலேம் நகரி னினிய மாந்தரும்
அருகினி லமைந்த ஊரா ரனைவரும்
ஒருங்கே திரண்டனர் உள்ளம் மகிழ்ந்தனர்
நெருங்கி வந்தனர் யோவான் நோக்கியே। 24

(வேறு)

பரிசேயர் சதுசேயர் கண்டதும்
  பரிசுத்த யோவானும் கூறுவார்
"விரியன் பாம்பு குட்டிகளே!
  வேடிக்கை யான மனிதர்களே!
வரும்சினத்தில் தப்பிக்க நீங்கள்
  வகைதேடியே வந்தீரோ – மனந்
திருந்திய வாழ்க்கை நாடினால்
  சிறுமை தண்டனை உமக்கேது? 24அ

ஆபி ரகாமின் பிள்ளைக
  ளென்றே ஆர்ப்பரிக்க வேண்டாமே।
ஆண்டவர் வல்லமை அறிவீரா – அவர்
  ஆதியும் அந்தமும் தெளிவீரா
கற்களைக் பிள்ளை களாக்கிடும்
  கடவுளின் அற்புதம் புரியாதா?" 24ஆ

நல்லகனிகள் ஈயா மரங்கள்
இல்லையென்றே ஆகட்டும் அதன்மேல்
வல்ல கோடரி வீழட்டும்
வேர்களோ அறுந்து போகட்டும் । 24இ

(வேறு)

உள்ளந் திருந்திட உணர்வுகள் மாறிட – நீரை
அள்ளியே அறிவு முழுக்கினை யளிக்கிறேன்
என்னிலும் பெரியவர் இனிய முகத்தினர்
மண்ணில் உயர்ந்தவர் மாபெரும் நல்லவர் – அவ்
வண்ணலின் மிதியடி சுமந்திட எனக்கோ
சின்ன தகுதியு மிலையென் பேனே । – 25

தூய ஆவியால் சுட்டிடும் நெருப்பால்
ஆய முதல்வன் அன்பின் தலைவன்
அறிவு முழுக்கினை யளிப்பது யுண்மை
விரைவில் வருவார் விந்தை குமாரனே ।
கையினில் தூற்றுக் கூடை யேந்தி
களத்தினை மிகவும் தூய்மை செய்வார்
கோதுமை நன்மணி குவிப்பா ரங்கே
தீதுறு பதரினை நெருப்பினி லிடுவார்
சவ்வாது சொல்லோன் யோவான் தானும்
இவ்வா றுரைதான் ஆற்றுங் காலை..... 26

இயேசுவின் திருமுழுக்கு

கருநீல யோர்தானின் கரைக்கு வந்தார்
கலிலேயா என்கின்ற இடத்தை விட்டு
பெருஞ்சீலர் யோவானை நாடி வந்தார் – யேசு
பெறற்கரிய முழுக்குதனைப் பெறுவ தற்கே
“அருமருந்தே। ஆருயிரே। அய்யா। நானோ
உம்மாலே திருமுழுக்கு பெறுதல் விட்டு
திருவுருவே। என்னிடத்தில் வருதல் நன்றோ” – என்று
திகைத்துப்போய் சொல்லின்றி மயங்கி னாரே। 27

“அருமையே। யோவானே எனக்கு நீயும்
அகமகிழ்ந்து இப்போதி டங்கொ டுப்பாய் – என
பெருமானோ யோவானைக் கேட்டு நின்றார்
பழங்கால நீதிதன்னை நிறைவேற் றிடவே
நெருங்கியேதான் யோவானும் அருகில் சென்று
நாடுபோற்றும் நன்முழுக்கை அளித்த தாலே
வருங்கால வரலாற்றில் யோர்தான் ஆறும்
வகையுடனே நற்பேற்றைப் பெற்ற தன்றோ. 28

திருமுழுக்குப் பெற்றவுடன் எழுந்து நின்றார்
தேவமைந்தன் யோர்தானின் கரையில் மேலே
விரிவானம் திறந்திற்று வியப்பி லாழ
விண்ணவரோ தோன்றியுட னுரைக்க லுற்றார்
“அருட்செல்வர் யிவரேயென் ஆவி தன்னில்
அன்பொழுக நிறைந்தவரு மிவரே” யென்றார்
வருகின்ற ஆவியான வெண்பு றாவும்
வள்ளல்மேல் இறங்குவதை யோவான் கண்டார். 29

இயேசு சோதிக்கப்படல்

அருள்விழியால் அவனியினைக் காக்கும் வள்ளல்
ஆவியவர் கட்ட ளையால் காடு சென்றார்
மருளாது நாற்பதுநாள் நோன்பி ருந்தார்
மறந்திருந்த பசிதாகம் தனையு ணர்ந்தார்
இருளான சாத்தானோ ஆங்கு வந்து
இறைமகனைச் சோதிக்கத் துவங்கி னானே
திருமகனே தேவமகன் என்ப தானால் – நீ
கருங்கல்லை அப்பமாக மாற்று வென்றான். 30

மறுமொழியாய் செப்புகின்றார் மணவா ளன்தான்
மாப்பசியைத் தீர்ப்பதில்லை உணர்க வென்றே
சிறுமதியோன் சாத்தானே சிந்திப் பாயே
சீரியநல் இறைமொழிக்கே பணிவாய் நீயே
நறுந்தேனாம் மறைநூலி னுரையை யேற்பாய்
நல்லதென யுணர்ந்துகொண்டு நடப்பாய் நன்றே
பொறுமையை யிழந்திட்ட சாத்தான் தானும்
பொன்மகனை உடனழைத்தான் எருச லமேக 31

ஆலயத்தி னுச்சிக்குக் கொண்டு சென்று
ஆண்டவனின் மகனென்றால் யேசு வேநீ
மேலிருந்து குதியுமென்றான் மயக்க மின்றி
விண்ணவர்கள் வருவார்கள் தாங்கிக் கொள்ள
கால்கள்தான் கற்களிலே இடறா வண்ணம்
காப்பதுதான் உறுதியென்றான் கேலி யாக
பால்மனத்துப் பெருமகனார் பகரு கின்றார்
பிதாதம்மைச் சோதிக்க வேண்டா மென்றே. 32

மலைமுகட்டின் உச்சிக்கு அழைத்துச் சென்றான்
மாநிலத்தின் மேன்மையைக் காட்டி நின்றான்
தலைமகனே எனைத்தொழுதால் இவைய னைத்தும்
தருவேன்நான் உனக்கென்றான் சாத்தா னாசை
வலைதன்னில் சிக்காத தேவ மைந்தன்
விலகிச்செல் சாத்தானே என்று ரைத்தார்
கலையான விண்ணவர்கள் ஆங்கி றங்கி
கனிவுடனே யவருக்குப் பணிபு ரிந்தார். 33

இயேசுவின் அறவுரை

மணவாளன் உள்ளத்தில் நிறைந்த சீலர்
மாமனிதர் போற்றுகின்ற இனிய தோழர்
குணவாளன் யோவானாம் கொள்கைக் குன்றம்
குறைமதிதான் கொண்டோரின் சூழ்ச்சி யாலே
தணலாகும் சிறையினிலே தள்ளப் பட்ட
தாங்கொண்ணாச் செய்தியினைக் கேட்ட அண்ணல் - சுடு
மணல்மேலே போடப்பட்ட மீனை யொப்ப
மனத்தாலே யெண்ணியெண்ணி வருந்தி னாரே। 34

அலைமோதும் கலிலேயா நாடு விட்டு
அழகுமிக்க நாசரேத்தாம் நகரை நீங்கி
கலைமிளிரும் செபுலானாம் நப்தல் நாடு
கண்கவரும் எல்லையி னருகே சென்று
வலைவீசி மீன்பிடிக்கும் கப்பர் நகூம்
வரலாற்று ஊரினிலே குடியி ருந்தார்
மலையான ஏசாயா சொன்ன வண்ணம்
மனிதரெல்லாம் பேரொளியைக் கண்டார் மெய்யே। 35

"மண்ணிலுள்ள மனிதர்காள்! மனது மாறி
வையத்தில் நிலைத்திடுவீர் நீடு வாழ்வீர்!
விண்ணரசு நெருங்கிற்று யீதுவே நேரம்
வீணான ஆர்ப்பாட்டம்" வேண்டா மென்று
தண்ணிலவாம் யேசுபிரான் கூற லுற்றார்
செபுலோன்வாழ் நப்தலின்நன் மக்க ளுக்கே
கண்மணியாம் கர்த்தாவோ கலிலே யாவின்
கடற்கரையில் காலார நடந்து சென்றார். 36

தேன்மொழியின் செல்வர்தாம் யேசு வண்ணல்
தென்றலுக்குச் சொந்தமான அன்பின் கன்னல்
வான்பரப்பின் கீழிருந்த கலிலே யாவின்
வளமான கடற்பரப்பில் நடந்த போது
மீன்பிடிக்கும் பேதுருநன் அந்தி ரேயா
வலைவீசிக் கொண்டிருந்த காட்சி கண்டு
நான்பிடிக்கச் செய்வேனே மனிதர் தம்மை
நலமாக வாருமென்றார் தன்பின் னாலே. 37

முதல் சீடர்களின் அழைப்பு

வலைவீசிக் கொண்டிருந்த உடன்பி றந்தார்
மனத்தாலும் மறுப்பேதும் எண்ணி டாமல்
நிலையான உலகொளியாம் யேசு பின்னால்
நடந்தாங்கே சென்றார்கள் நாடு போற்ற
தலையாய யிருசீட ரழைப்பு மேற்றார்
தக்கதொரு இடத்தையே தாமும் பெற்றார்
மலையான தேவமைந்தன் சொற்க ளேற்று
மலைக்காமல் பின்தொடர்ந்து சென்றார் தாமே. 38

தந்தையாம் செபதேயு என்பா ரோடு
தம்படகில் அமர்ந்திருந்து பழுது பார்த்தார்
கந்தலாகக் கிடந்திட்ட வலைகள் தம்மை
கருத்தான யாக்கோப்பும் யோவான் தானும்
சிந்தையில் நிறைந்திட்ட அன்புச் செல்வர்
சிறப்புமிக்க மக்களையே கண்டு விட்டார்
எந்தனொடு வருகவென பணித்த தாலே
இருவருமே மறுப்பிலாமல் உடன்சென் றாரே। 38அ

இயேசு பிணியாளிகளை நலம்பெறச்செய்தல்

கலிலேயா நாடு எங்கும் சென்று
நலம்புரி மன்றாட்டுக் கூடங் களிலே
நற்செய் தியாக சொற்பொழி வாற்றி
அரசின் செய்திகள் அனைத்து முரைத்தார் 39

நேரில் மக்களைப் பெருமான் பார்த்து
ஆறாப் பிணிகள னைத்தும் தீர்த்தார்
சீரியா தேசக் காடும் மேடும்
சீரிய செம்மலின் புகழ்எதி ரொலித்ததே। 40

இழுப்பு நோயும் இன்னபிற நோய்களும்
அழுத்திடும் பிணிகள னைத்தும் நீக்கி
பேயுடன் நோய்கள் சேர்ந்தே யோடவும்
தூயவன் கட்டளை பிறந்த தாங்கே. 41

திமிர்வாதக் காரனும் நலமாக்கப் பட்டான்
அமிர்தான ஐயன் அருள்வாக்கி னாலே
கலிலேய தெக்கப் போலி யூரிலும்
கலைக்கூ டமாகும் எருசலேம் நகரிலும்
மக்கள் திரளாய் நெருங்கி வந்து
எத்திக்கு மவரின் பின்னால் சென்றனர். 42

நானுந்தான் ஆதியாவேன் அந்த மாவேன்
நல்லுலகைக் காப்பாற்றும் இறையு மாவேன்
வானகமும் வையகமும் ஒழிந்த போதும்
வளங்கொழிக்கும் இயற்கையோ அழிந்த போதும்
தேனமுதாம் என்சொற்கள் ஒழிவ தில்லை
தெரிந்துகொள்வீர் என்றுரைத்த தேவ மைந்தன்
மானுடந்தான் வாழ்வதற்கு வழிக ளாக
மலைப்பொழிவை அருளினாரே கருணை சூழ்ந்தே 42அ

மானுடம் வாழ மலைப்பொழிவு

அறிவொளியாம் அருள்மகனார் அழகின் செல்வம்
ஆங்கிருந்த மக்களையே கண்டு கொண்டார்.
நெறிமுறையைப் பொழிவதற்கு விருப்பங் கொண்டு
நெடியமலை ஏறினாரே சீட ரெல்லாம்
முறையாக அவரருகே நின்ற போது
முத்தாகும் சொல்லெடுத்துத் தொடங்கி னாரே
குறையாத செல்வமாகும் அவரின் வாக்கே
குவலயத்தை வாழ்விக்கும் அருளின் நோக்கே. 43

"அகவிருளைப் போக்கவந்த ஆத வன்தான்
அருவிபென்னும் நீதிதன்னைச் சொரிய லூற்றே
முகமலர்வீர் அவனிபீரே ஆவி தன்னில்
வகையுடனே எளியோர்தான் பேறு பெற்றார்
இகமதிலே அல்லாது எளியோ ரெல்லாம்
அகமதிலும் சுகம்பெறுவார் என்றார் மேலும்
புகுவாரே விண்ணரசு அவர்க்கே சொந்தம்
புவிமீது நற்பேறு பெற்றா ரன்றோ. 44

அல்லலுறும் மாந்தரெல்லாம் பேறு பெற்றார்
ஆறுதலைப் பெறுவார்கள் அவர்க ளன்றோ.
இல்லையே சாந்தகுண முள்ள வர்தான்
இவனைப்போல் என்றிருந்தால் இவரே மண்ணை
நல்லியல்போல் தமதாக்கிக் கொள்வா ரவரோ
நாடுபோற்ற மேன்மையாய் வாழ்வா ரன்றோ
அல்லென்றும் பகலென்றும் அவருக் கில்லை
அவனியிலே மிக்குயர்வார் ஐய மில்லை 45

நிறைவான உள்ளத்தின் சொந்தக் காரர்
நீள்நிலத்தின் நீதியின்மேல் தாக முள்ளோர்
குறைவில்லா இரக்கத்தைக் கொண்ட வர்தாம்
கடவுள்தம் இரக்கத்தைப் பெறுவா ருண்மை
இறைவனையே காணுகின்ற பேறு பெற்றார்
இதயமதைத் தூய்மையாய் வைத்துக் கொள்வார்
முறையான சமாதானம் செய்வோ ரெல்லாம்
மக்கள்தாம் இறைவனுக்கே" யெனவாய் மலர்ந்தார். 46

என்பொருட்டு உங்கட்குத் துன்பம் நேரும்
இழிவாக தீமொழிகள் பொய்யு ரைப்பர்
தன்பொருட்டாய் இதையேற்றால் பேறு பெற்றீர்
தகைசான்ற மனத்துடனே மகிழ்வு கொள்வீர்
விண்ணகத்தில் பயன்மிகுதி அறிவீர் நீங்கள்
விந்தைகொள் இறைவாக்கார் பட்ட பாடு
மண்ணகத்தில் அக்காலத்தில் குறைவா? சொல்வீர்
மனிதர்களே என்கருத்தை ஏற்பீ ரய்யா. 46அ

உப்பும் ஒளியும்

ஈரமில்லா மனிதர்களே ஒப்புக் கொள்வீர்
இவ்வுலகின் உப்புநீங்கள் என்ற வுண்மை
சாரமில்லா உப்பாலே நன்மையில்லை – அன்புச்
சாரமில்லா மனிதராலே பயனேயில்லை – தெரு
ஓரந்தான் கொட்டவேண்டும் அந்த வுப்பை
ஒருக்காலும் சாரமாக்க முடியா துண்மை
யாருந்தான் அந்தவுப்பை மிதித்துப் போட்டு
வீணென்று ஒதுக்குவாரே உண்மை தானே. 47

நிலையில்லா உலகத்தீர் ஒன்று கேட்பீர்
நீங்கள்தான் இவ்வுலகின் ஒளியு மாவீர்।
மலைமேலே யிருக்கின்ற பட்ட ணந்தான்
மறைந்திருக்க முடியாது கண்க ளுக்கு
கலையான விளக்குதன்னை ஏற்றி நீயும் – மரக்
காலின்கீழ் வைத்தாலோ நன்மை யுண்டோ
அலையாக ஒளிவீச விளக்குத் தண்டாம் – அதன்
மேலிடுக। வீடெல்லாம் வெளிச்ச மாமே। 48

மாநிலத்து மக்களுக்குத் தொண்டு செய்தல்
வகையான நல்லொளியைத் தருதல் நேரே
வானத்து தந்தையோ மகிமை கொள்வார்
மகிழ்ச்சியுடன் அத்தொண்டை ஏற்றுக் கொள்வார் - வீண்
மீனொத்த அவ்வொளியும் தேக்க மின்றி
முன்செல்லும் என்பதையும் அறிதல் வேண்டும்
நீள்நிலத்து மண்டியவன் கிருளும் நீங்கும்
நீங்களெல்லாம் பேறுபெற்று நிலைத்து வாழ்வீர்। 49

திருச்சட்டம் நிறைவேற்றப்படல்

திருச்சட்டம் தீர்க்கமான உண்மை மற்றும்
மறைநெறியை அழிப்பதற்கு வந்தே னில்லை
அருள்நெறியை முதுமறையைக் காக்க வந்தேன்
அதனாலே வையகமும் வாழ்வ தற்கே
கருமேகம் சூழ்கின்ற வானும் மண்ணும்
காலத்தால் அழிந்திங்கே வீழ்ந்த போதும்
இறைநெறியை நிறைவேற்றி முடிக்கும் மட்டும்
இமியளவும் எழுத்துறுப்பும் ஒழியா துண்மை. 50

கற்பனைகள் சிறிதேனும் பிறழ்ந்து விட்டால்
கட்டளையைக் கற்பிக்கத் தவறி விட்டால்
நற்பயனோ ஏதுமில்லை நானி லத்தீர்
நான்சொல்வேன் அவர்களெல்லாம் சிறியோ ராவார்
சொற்சுவையாய்க் குறைவின்றி எடுத்துச் சொல்வோர்
சுகமான விண்ணகத்தில் பெரியோ ராவர் - பரிசேய
விற்பனரின் நீதியினும் உங்கள் நீதி
நீடித்தால் விண்ணகத்தே சேர்வீ ரன்றோ। 51

கொலை செய்யாதே

விலைமதிக்க முடியாத முன்னோர் வாக்கு
வியனுலகு மதிக்கின்ற அன்பின் நோக்கு
"கொலைசெய்யா திருப்பாய்நீ ।" என்ப தாகும்
குற்றமின்றி அறிந்துள்ளீர் । மிகவும் நன்று – அன்பு
அலைவீசும் உடன்பிறந்தார் வீண னென்று
அறைந்திடுவோர் அவர்மீது கோபங் கொள்வோர் – எரி
உலையான நரகத்தின் உணவு மாவார்
உடன்பிறப்பை மூடனென எண்ணு வோரே। 52

ஆணிப்பொன் ஆண்டவனின் மேடை வந்து
அன்பொழுகக் கரங்குவித்து முன்னே நின்று
காணிக்கைச் செலுத்துகின்ற வேளை தன்னில்
குறைகாணல் தம்பியிடம் சரியா சொல்வீர் ।
வீணன்றோ உம்தொழுகை விரைந்து செல்வீர்
வியந்திடவே உடன்பிறப்பை அமைதி செய்வீர்
காணிக்கை மீண்டுவந்து கொடுப்பீர் நீரே
கட்டாயம் கடவுள்தம் அருளு முண்டே । 53

(வேறு)

ஏதிலான் வந்துனை ஒப்புக் கொடுக்கலாம்
நீதிபதி யோதான் காவலில் வைக்கலாம்
நாதி யின்றிசிறைச் சாலையில் தள்ளலாம்
ஆத லினாலே வழக்காடல் வேண்டாம்
வீதி யிலேயே நன்மனம் பொருந்து – மாறின்
வேதனை கூடும் விளையாட் டல்ல
மீதி யின்றியே காசெலாம் செலவே
ஆதியின் சொல்லிது அவசியம் உணர்கவே । 54

வரைவின் மகளிர்

ஒருவனும் ஒருத்தியும் உயரிய நெறியில்
விரும்பியே வாழ்ந்திடும் வாழ்க்கை யொன்றே
கற்பெனப் படுமே அதுவே பொதுவே
நற்குண மென்பது நங்கைக்கு மட்டுமா
வேத முரைக்கும் விந்தை கேளீர்
தோதி லையென கணவன் நினைத்தால்
தள்ளுதற் சீட்டு கொடுத்தே துணையைத்
தள்ளியே விடலா மென்பதே யாகும். 55

நானும் முரைப்பேன் நல்லோர் கேளீர்
தேனென விருப்புடன் பார்ப்பவ னெவ்வனும்
விலக்கிய மாதரை மணப்பவன் தானும்
விலைமகள் தொழிலை செய்பவ னாவான் – அதனால்
நிலைபிறழ்ந் தேநீ நிற்றல் சரியிலை – கற்பை
விலைமக ளாகி விற்றல் முறையிலை – என்று
அன்று முன்னோர்க் கறைந்ததை நிறைவாய்
நன்றாய் நீங்கள் கேட்டிருப் பீரே. 56

பெண்டிற் கொருநீதி ஆடவர்க் கொன்றா ?
இன்றுநான் சொல்வதை இசைவுடன் கேளீர்
இச்சை யுடனே நோக்குவோன் எவனும்
உள்ளத் தாலவளைக் கூடி யாயிற்று
பள்ளத்தில் வீழ்ந்தது அவனுடைப் பண்புகள்
கண்தானே யுனக்குக் கலகம் கொடுப்பது
பெண்மயக் கத்தைப் பெற்றுத் தருவது
வலக்கை உனக்குத் துன்பம் தந்தால்
கலக்க மின்றியே தறித்துப் போடுக ।

விலக்கி விடுதல்

நாடு மதித்திடும் நற்குண மங்கையை
தேடிடும் காரணம் யாது மின்றியே
வேண்டா மென்று வெறுப்புடன் ஒருவன்
வேண்டு மென்றே ஒதுக்குவா னாகில் – அவளை
விலைமக ளாக்கிடத் துடிப்பவ னாவான்
நிலையிலா உலகில் அவளை மணப்பவன்
ஆடவ னல்லன் அவனும் பாரீர்
கேடுசூழ் விலைம களுக்கு நிகரே ।.

ஆணையிட வேண்டாம்

மெய்யாகச் செப்புகின்றேன் மேலும் கேட்பீர்
விளக்கமுடன் பழங்கருத்தை நினைவு கூர்வீர்
அய்யன்தன் ஆண்டவனின் முன்னே சென்று
ஆணைகள் செலுத்திடவே வழிக ளுண்டு
பொய்யாணை யிடவேண்டாம் பொருத்த மன்று
புரிந்துகொள்வீர் இச்செயலோ புன்மை யாகும்
உய்விக்கும் கர்த்தாவின் முன்னே நின்று
உளமார ஆணைதான் இடவேண் டாமே । 56அ

வானத்தின் மீதாணை யிடவும் வேண்டாம் – அது
வையத்தைக் காப்போனின் அரிய ணையாம்
தேன்சிந்தும் புவிமீதும் ஆணை வேண்டாம் – அது
தேவனின் சீரடிகள் செப்பு கின்றேன்
மீன்துள்ளும் எருசலேமேல் ஆணை வேண்டாம் – அது
வையத்துப் பேரரசின் நகர மாகும்
நான்சொல்வேன் நல்லோரே நன்றே யல்ல
நானிலத்தில் ஆணைதான் யிடவேண் டாமே । 56ஆ

தலைமுடியில் ஒருமுடியின் நிறத்தை மாற்ற
    தகுதியில்லை திறனில்லை உந்த னுக்கு
கலையாக விளங்குகின்ற கருமை தன்னை
    வெண்மையாய் ஆக்கிடவே முடியா துண்மை
நிலையாக இருக்கின்ற வெண்மை தன்னை
    கறுப்பாக மாற்றிடவும் முடியா துண்மை
மலையாக உள்ளவற்றை உள்ள தென்பீர்
    மயங்காதீர் இல்லையெனில் இல்லை யென்பீர்। 56

கண்ணுக்குக் கண் வேண்டாம்

கண்ணுக்குக் கண்ணென்ற கயமைக் கூற்று
    பல்லுக்குப் பல்லென்ற பழைய கூற்று
புண்ணுக்குள் வேல்பாய்ச்சும் செய்கை யன்றோ
    புதுமையாய் நான்சொல்வேன் புரிந்து கொள்வீர்
மண்ணுக்குள் செல்லும்வரை மறக்க வேண்டாம்
    வையத்தை வாழ்விக்கக் கூறு கின்றேன்
விண்ணுக்குள் உனையுயர்த்தும் மேன்மை யுண்டு
    வீணாகத் தீமையை யெதிர்த்தல் தீதே। 57

உலகத்தில் புதுக்கருத்தைக் கூறு கின்றேன்
    ஒப்பற்ற அக்கருத்தை ஏற்றுக் கொள்வீர்
கலகமதை விளைவிக்கும் மனிதன் வந்து - வலது
    கன்னத்தில் அறைந்துவிட்டால் என்ன செய்வாய்
நிலைகுலைய வேண்டாம் அருகே சென்று - இடது
    கன்னத்தை இதமாகத் திருப்பிக்காட்டு அமைதி
குலைந்திடவே வழக்காடி (உள்) ஆடை கேட்டால்
    குறைவின்றி மேலாடை கொடுப்பாய் நீயே। 58

உன்முன்னால் வந்தொருவன் கட்டா யமாக
மைல்தூரம் வரவேண்டு மென்று சொன்னால்
என்செய்ய இருமைல்கள் உடன்நீ செல்க
என்கொள்கை இதுவென்பேன் ஏற்றுக் கொள்க
உன்னிடத்தில் இல்லையென்று ஒருவன் வந்து
ஒழுங்குடனே கெஞ்சிநின்றால் கொடுத்தல் நன்று –மேலும்
இன்னலுற்றோர் கடன்கேட்டால் முகங்கோ ணாதே
எப்போதும் உதவிசெய்வீர்। நிலைக்கும் வாழ்வே। 59

பகைவனுக்கும் அன்பு

பழைமையாம் கருத்தொன்றைக் கேட்டி ருப்பீர்
பகைவரையே வெறுக்கவேண்டும் என்ப தாகும்
இழையோடும் அன்போடு நண்ப ரோடு
இதமாக என்றென்றும் வாழ்ந்தி டுங்கள்
மழைபோன்று அன்புதனைப் பொழிய வேண்டும்
மாற்றாரின் மனமெல்லாம் மாற வேண்டும்
அழிகநீவீர் என்போரை வாழ்த்தி டுங்கள்
அன்பொன்றே அகிலத்தைச் செழிக்கச் செய்யும். 62

வகைவகையாய் உங்களுக்குக் கூறு கின்றேன்
வையத்தில் வாழ்வாங்கு வாழ வேண்டின்
பகைவனுக்கு மருளுகின்ற உள்ளம் வேண்டும்
பண்போடு உதவிகளைச் செய்தல் வேண்டும்
நகைமுகமாய் நிற்கவேண்டும் நன்மை செய்ய
நிந்தித்த போதினிலும் வாழ்த்த வேண்டும்
மிகையாக மன்றாடி வேண்டிக் கொள்வீர்
மிகுதுன்பம் விளைவிக்கும் மதிகே டர்க்கே। 63

கண்களிலே பேரருளைத் தாங்கி நின்று
கட்டாயம் நற்செயல்கள் புரிவோ ரெல்லாம்
விண்ணில்தான் இருக்கின்ற தந்தை முன்னால்
மேன்மைபெறு மக்களாக யிருப்பா ரன்றோ ?
மண்ணில்தான் இருக்கின்ற நல்லோர் மற்றும்
மாசடைந்த மக்கள்தாம் தீயோர் மேலே
வெண்கதிரை உதிக்கச்செய் வார்மா மழையை
வீழ்ந்திடவேச் செய்திடுவார் தேவன் தாமே। 64

அன்புசெய்வார் தம்மோடு அன்பு செய்தல்
அரியசெயல் ஆகாது ஆயக் காரர்
பண்பஃது அறிவீரா பற்று டைய – உடன்
பிறந்தானை வாழ்த்துதலில் சிறப்பே யில்லை
விண்ணகத்துத் தந்தைபோல் நிறைவு கொண்டால்
வியக்கின்ற அளவிற்கு நலமே சேரும்
மண்ணகத்தில் இருக்கின்ற ஆயரைப் போல்
மயக்கத்தில் இருந்திட்டால் நன்மை யுண்டோ ? 65

தேவையுள்ளவருக்குக் கொடுத்தல்

அறச்செயல்கள் செய்வோரே ஒன்று சொல்வேன்
அன்புடனே என்சொல்லை ஏற்றுக் கொள்வீர்
புறத்தினிலே அச்செயல்கள் தெரியா வண்ணம்
புரிந்துகொண்டு விழிப்புடனே செய்தல் வேண்டும் –இன்றேல்
பரத்தினிலே இருக்கின்ற தந்தை காண்பான்
பயனில்லை நீர்செய்த அறத்தி னாலே
உரத்தினிலே குரலெழுப்பிப் புகழ வேண்டின்
உலகினிலே அறமேநீ செய்ய வேண்டாம்.। 66

இறைவன்தன் ஆலயத்தில் எழில்ம ணக்கும்
ஏற்றமிகு வீதிகளில் மாய ரைப்போல்
பறைசாற்றல் செய்யாதே உந்தன் முன்னால்
பண்பாடு இதுவன்று புரிந்து கொள்க।
மறைவாக இருக்கட்டும் வலது கையின்
மாச்செயல்கள் இடக்கைதான் அறியா வண்ணம்
மறைவான பொருளனைத்து மறியும் தந்தை
மறைவின்றி நற்பலனை நல்கு வாரே. 67

இறைவேண்டல்

மன்றாடும் போதினிலே மனிதா நீயும்
வெளிவேடம் போடவேண்டாம் மற்றோர் காண – சிலர்
நின்றாட விழைகின்றார் வீதி மற்றும்
மன்றாட்டுக் கூட்டத்தி லவர்கள் ஐயோ
என்றுந்தான் நற்பேற்றைப் பெறுத லில்லை
என்னுரையை ஏற்றுக்கொள் இல்ல மேகி
உன்னறையைப் பூட்டிக்கொள் பிதாவை நோக்கி
உளமார மன்றாடி வாழ்த்திப் பாடு। 68

அப்போதே ஆண்டவன்தா னாங்கு தோன்றி
அளவற்ற. பயன்தருவார் அறிந்து கொள்க।
எப்போதும் வீணான சொற்கள் வேண்டாம் – அதனால்
எங்குந்தான் விண்ணப்பம் ஏற்கு மென்ற
தப்பான எண்ணந்தான் சிலருக் குண்டு
தகுதியில்லை அக்கருத்தை நீக்கிப் போடு
முப்போதும் முன்னர்தான் அறிந்த தேவன்
முறைசெய்து அருளுவாரே அறிவீப் பீரே। 69

இயேசு கற்பிக்கும் மன்றாட்டு

இறைவனின் அருளைப் பெற்றிடும் வகையில்
முறையுடன் இப்படி வேண்டிட வேண்டும்
வானகம் உறையும் எங்கள் தந்தையே
வையக மக்கள் போற்றி நின்றோமே
தங்கள் திருப்பெயர் தூய்மை யாகுக
உங்கள் அரசோ உடனே வருக।
விண்ணில் திருவுளம் விளங்கல் போன்று
மண்ணிலும் விளங்கிட வேண்டு கின்றோமே
நாளும் வேண்டிய உணவினை யளித்து
நயமாய் அருளே எங்களைக் காப்பீர்.
எங்கள் கடனாளி எவரேனும் இருந்தால்
இன்முகத் துடனே மன்னித்தல் போன்று
எங்கள் பாவக் கடன்களை இறைவா
எங்களுக் காக மன்னித் தருள்வீர்
சோதனை வலையில் சிக்க விடாமல்
தீமை யினின்று எங்களை மீட்பீர்
அரசொடு வல்லமை மகிமை யாவும்
இறைவா உமையே சாருமே – ஆமென்.।

உனக்கொரு மனிதன் தவறுக ளிழைத்தால்
பிணக்கு களின்றி மன்னிப் பளிப்பீர்
அப்படிச் செய்யின் ஆண்டவன் தானும்
ஒப்பியே உனக்கும் மன்னிப் பளிப்பார்
மன்னிப் பளிக்க வில்லை யாயின்
மன்னிப் பதில்லை மன்னிய இறைவனே।

உண்ணா நிலை

உண்ணா நோன்பு இருந்திடல் வேண்டின்
இன்முகம் வாடல் ஏற்புடைத் தன்று
மகிழ்ச்சியில் இதயம் இருப்பது இனிதே
இகழ்ச்சி யன்றோ வாடி நிற்பது – அது
வேடக் காரரின் வேலை யன்றோ
நாடகம் வேண்டாம் நோன்பி ருப்பதில்
மறைவினி லுறையும் இறைவ னறிந்திட
முறையாய் நீயும் முகத்தைக் கழுவு
தளர்ச்சி யுற்றது தெரியா வண்ணம்
தண்ணெனத் தலைக்கு எண்ணெய் பூசு
மறைவினில் லுள்ளதைப் பார்த்திடும் இறைவன்
நற்பல னளிப்பார் வெளியிலும் விரைந்தே।

விண்ணுலகச் செல்வம்

மண்ணுலகில் செல்வத்தைச் சேர்க்க வேண்டாம்
மாப்பூச்சி துருவுந்தான் அரித்துப் போடும்
எண்ணமுடன் திருடுவார்கள் கன்ன மிட்டு
இவ்வுலகில் எல்லாமே வீணே யாகும்
விண்ணுலகில் செல்வத்தைச் சேர்த்து வைத்தால்
மாப்பூச்சி துருவுந்தா னங்கே யில்லை
திண்ணமுடன் கன்னமிடல் களவு மில்லை
செல்வமுள்ள இடத்தினிலே இருக்கும் உள்ளம். 72

(வேறு)

கண்ணே உடலின் விளக்காய் யிருக்கும்
உன்கண் தெளிவாய் இருந்திடில் உடலில்
பொன்னொளி பரவிடும் முழுது மங்கே
கண்ணின் பார்வை கேடா யிருப்பின்
காரிருள் வண்ணமாய் மெய்யு மிருக்கும்
உன்உள் ளொளியே யிருளென் றாகில்
பன்மடங் காகுமே படரிரு ளங்கே
ஒருவன் ஊழியம் செய்ய விரும்பின்
இருதலை வருக்குச் செய்ய வியலுமோ
பற்றுவான் ஒருவனை அதேவே ளையில்
மற்றத் தலைவனைப் புறக்கணிப் பானே
தேவனை எண்ணியே தொண்டு செய்வதும் - பொருள்
தேவைக்காகச் சேவை செய்வதும்
ஆவது முண்டோ ஒருதனி மனிதனால் ।   73

கவலைப்பட வேண்டாம்

என்னத்தை உண்போ மென்றும்
என்னத்தைக் குடிப்போ மென்றும்
எண்ணத்தால் வாழ்க்கைக் காக
எதற்காகக் கவலல் வேண்டும்
என்னத்தை உடுப்போ மென்றும்
எப்படி உடுப்போ மென்றும்
எண்ணத்தால் உடலுக் காக
ஏன் நீங்கள் வருந்த வேண்டும்.   74

உணவினும் உயிரும் உடையினு முடலும்
உயர்ந்த தன்றோ உணர்வீர் மக்காள்
வண்ணப் பறவைகள் விண்ணில் பறப்பதை
கண்ணால் கூர்ந்து கவனித்துப் பார்ப்பீர்
மண்ணில் அவைதான் விதைப்பது முண்டோ।
வகையாய் வளர்த்து அறுப்பது முண்டோ।
களஞ்சியம் நிறைய சேர்ப்பது முண்டோ।
உளத்தினில் கொள்வீ ருண்மை மக்காள்
உங்கள் ஆண்டவன் அவைகளைக் காப்போன்
பறவை யினத்தைக் காட்டிலும் நீங்கள்
பன்மடங் காக உயர்ந்தவ ரன்றோ

கவலைப் படுவதால் காரிய மாகுமோ ? அது
உடல்வளர்ச் சிக்கோர் உறுதுணை யாமோ
உயரத்தில் ஒரு முழம் கூட்டவும் முடியுமோ
வண்ண உடைக்கு ஒருபோதும் நீங்கள்
வருந்திடல் வேண்டாம் வாட்டமும் வேண்டாம்.
வயல்வெளி மலர்களைக் கண்டது முண்டோ।
வளரும் முறையினைக் கவனித்த துண்டோ
உழைப்பது மில்லை நூற்பது மில்லை – எனினும்
சாலமன் போன்ற சக்கர வர்த்திகள்
கோலமாய் மலர்போல் உடுத்திய திலையே.
நாளைக் காக கவலை வேண்டாம்
மேலாய் நாளும் தனக்காய்க் கவலும்
அந்த நாளுக்கு எந்த விதமோ
அவ்வா றாக பாடு। போதுமே. 75

ஒருநா ளிருந்து மறுநாள் நெருப்பில்
விரைவாய் பொசுங்கும் புல்லுக்கும் தேவன்
எத்தனை அழகாய் உடைகளை யீந்தான்
வித்தகர் செயலை விளக்க முடியுமா
புல்லுக்கே தேவன் தந்தா னென்றால்
நல்லோர் பெறுவது நிச்சய மல்லவா ?

என்னத்தை யெப்படி உண்போ மென்றும்
என்னத்தை யெப்படி குடிப்போ மென்றும்
வண்ண உடைகளை யுடுப்பது யெப்படி – என
எண்ணங் கொள்வது ஏனோ சொல்வீர்
அறிவிலிச் செயல்கள் இவைதாம் அறிவீர்
இறைவன் அறிவார் எல்லார் தேவையும்
முதலில் நீங்கள் முதல்வனின் அரசு
இதந்தரும் நீதி இரண்டைத் தேடுவீர்
நாளை நாளை என்று நீங்கள்
நாளைக் காக வருந்திட வேண்டாம். 76

நாளை வருந்தட்டும் அதுதான் நலமே
நாளின் பாடுகள் நாளுக்குப் போதும்
நாயகன் நவின்றார் இவ்வா றாக
தூய சொற்களோ தேனுக்கு நேரே ।

தீர்ப்பு அளித்தல்

குற்றம் புரிந்தோர் பிறரென நீயும்
சட்டென முடிவு செய்திட வேண்டாம்
குற்ற வாளி நீயே ஆவாய்
மற்றோர் தீர்க்கப் படுதல் போன்றே
மண்ணில் நீங்களும் தீர்க்கப் படுவீர்
நீங்கள் அளக்கும் அளவின் படியே
நயமாய் உங்களுக் களக்கப் படுமே 76அ

உன்கண் தூணை உணரா நீயும்
பிறன்கண் துரும்பினைப் பெரிதாய் காண்பதேன்।
திண்ணிய தூணோ கண்ணி லிருக்க
நன்னெறி யாமோ உந்தன் கூற்று
நகைப்பிற் குரியது என்ன வென்றால்
பிறன்கண் துரும்பினை எடுப்பேன் என்பது.
முதலில் செய்வது உன்குறை நீக்கல்
முறையுடன் உன்கண் தூணை எடுப்பது
முடிவில் பார்ப்பாய் பிறன்கண் துரும்பை 77

தூயதை நாய்க்குக் கொடுத்திடல் வேண்டாம்
ஆய முத்தினை பன்றிமுன் போட்டால்
அதனுடை அருமை அஃது அறியுமோ।
அழுக்குடன் அதனைக் காலால் மிதிக்கும்
செருக்கடன் திரும்பி உங்களைப் பீறுமே। 78

(வேறு)

கேளுங்கள், தட்டுங்கள், தேடுங்கள்

கேளுங்கள் அன்பர்காள் கொடுக்கப் படுமே
கட்டாயம் தட்டுங்கள் திறக்கும் தானே
நாளுந்தான் தேடுங்கள் கண்ட டைவீர்
நானுரைக்கும் செய்தியினைப் புரிந்து கொள்வீர்
மேலுந்தான் உங்களுக்கே யொன்று சொல்வேன்
மகிழ்ச்சியுடன் கேட்பவனோ பெற்றுக் கொள்வான்
சீலமுடன் தேடுபவன் கண்ட டைவான்
திறந்துவிடும் தட்டுகின்ற நல்லோ ருக்கே। 79

பசித்துவரும் தன்மகனோ அப்பங் கேட்டு
பண்புடனே தந்தையை நெருங்கி வந்தால்
புசிமகனே நன்றாக யென்று சொல்லி
பொறுக்கிவந்து கல்லொன்றை அளிக்க மாட்டான்
மசியநிற மீன்வேண்டு மென்று கேட்டால்
வகையான பாம்பொன்றைக் கொடுக்க மாட்டான்
கசடரும் அன்புசெய்ய அறிந்த போது
கடவுள்தன் அன்பிற்கு எல்லை யுண்டோ। 79அ

பொன் விதி

ஆதியிலே வகுத்திட்ட சட்டம் ஈது
அவ்வாறே உணர்த்திட்ட (இறை) வாக்கும் ஈது
நீதியிலே நாட்டமுள்ள மனிதர் நீங்கள்
நினைக்கின்றீர் மற்றவர்கள் நன்மை செய்ய
கோதில்லா விருப்பத்தைப் போலே நீங்கள்
குறைவின்றி மற்றவர்க்கும் நன்மை செய்வீர்
தீதில்லா இம்மொழியை ஏற்றுக் கொள்வீர்
சீர்பெறுமே நும்வாழ்க்கை என்றார் செம்மல் 79

இருவித வாயில்கள்

வாழ்வினைத் தேடிச்செல்ல வேண்டு மாயின்
வாயிலோ நுனழவதற்கு நெருக்க மாகும்
தாழ்வினை நாடிச்செல்ல விருப்ப மாயின்
தடையின்றி நுழைந்திடவே வழியு முண்டு
பாழ்பட்டுப் போவதற்குப் பாதை தன்னைப்
பாரினிலே அறிந்தவரோ பலபே ருண்டு
வீழ்ச்சியின்றி வாழ்வுதன்னை அமைப்ப தற்கு
வழியறிந்தோர் புரிந்துகொள்வீர் சிலரே யுண்டு । 80

கள்ள இறைவாக்கினர்

கள்ளமான உள்ளங்கொள் இறைவாக் கினரோ
கணக்கின்றி வருவார்கள் கவனம் கொள்வீர்
குள்ளமான பண்புடையோர் ஆட்டுத் தோலைக்
குறைவின்றி போர்த்தியேதான் வருவா ரானால்
உள்ளத்தால் ஓநாய்கள் உணர்ந்து கொள்வீர்
உலகினிலே அறிவீர்கள் அவர்தம் கனியால்
முட்செடியில் திராட்சையைப் பறித்துக் கொள்வார்
முட்பூண்டில் அத்தியினை அவர்ப றிப்பார் 81

நன்மரங்கள் நற்கனியால் பயன ளிக்கும்
நச்சுமரம் அளிப்பதுவோ தீமை யொன்றே
புன்மரங்கள் நற்கனியை ஈவ தில்லை
புனிதமரம் தீக்கனியை ஈவ தில்லை
நன்மையில் மரங்களெல்லாம் வெட்டப் பட்டு
நல்தீயில் போடுதற் கேது வாகும்
உண்மையை அறிந்துகொள்ள வழியொன் றுண்டு
உத்தமரை அவரீயும் கனிகள் தாமே । 82

வானத்து என்தந்தை விருப்பந் தன்னை
வையத்தில் செய்பவனோ விண்ணில் சேர்வான்
மோனமுடன் கர்த்தாவே யென்று ரைப்போர்
விண்ணரசில் நுழைவதில்லை யுண்மை யீது
தீனமுடன் அந்நாளில் அவர்க ளெல்லாம்
செவிக்கிழிய கர்த்தாவை அழைத்து நின்று
ஆனவரை நாங்களெல்லாம் இறைவாக் குரைத்தோம்
அற்புதங்கள் செய்தோமே என்றே சொல்வார் । 83

என்றுரைக்கும் அவர்களுக்கு நானும் சொல்வேன்
எப்போதும் அவர்களையே அறிந்த தில்லை
ஒன்றுமட்டும் உறுதியாகச் சொல்லு கின்றேன்
ஒருக்காலும் அறிந்ததில்லை என்பே னுண்மை
தொன்றுதொட்டு தீச்செயல்கள் புரிவோர் தம்மை
தூரச்செல் எமைவிட்டு யென்று ரைப்பேன்
நன்றுதானே என்கூற்று நானி லத்தீர்
நலமாக புரிந்துகொள்வீர் என்றார் ஐயன் । 84

வீடுகளைக்கட்டும் அறிவாளியும் அறிவிலியும்

"என் சொல்லை ஏற்பவனும் மற்று மங்கே
எப்போதும் அதன்படியே நடப்போன் தானும்
கன்மலையில் வீட்டினைக் கட்டுவோனாம் – அது
காற்றுக்கும் பெருமழைக்கும் நிலைத்து நிற்கும்
புன்மைசேர் பெருவெள்ளம் வந்த போதும்
பேய்போன்று அவ்வீட்டைத் தாக்கி னாலும்
வன்மையுடன் நிலைத்திருக்கும் எந்தன் வாக்கை
வகையாக நிலைத்துவாழ்வான் ஏற்போன் தானே । 85

என்சொல்லை ஏற்காத மனிதன் தானோ
இருளான அறிவுகொண்டோன் மற்று மவன்
மென்மணல்மேல் தன்வீட்டைக் கட்டு வீக்கும்
மனிதனுக்கு ஒப்பாவான் பெய்யு கின்ற
வன்மழைக்கும் பெருவெள்ளம் காற்றி னுக்கும்
வகையாக அவ்வீடோ பாழாய்ப் போகும்" – என
தண்மொழியில் சொல்லவில்லை இயேசு எம்மான்
தகைசான்ற அதிகாரம் தெரிந்த தங்கே । 86

தொழுநோயாளி நலமாக்கப்படல்

கன்மலையின் கீழிறங்கி வந்த போது
கடல்போல மக்கள்தாம் பின்தொ டர்ந்தார்
மென்குரலில் ஒருவன்தான் பணிந்து நின்று
மேன்மையே । ஆண்டவரே।விருப்ப மாயின்
என்நோயைக் குணப்படுத்தும் என்றே வேண்ட
எழில்சிந்தும் கரம்நீட்டி யேசு சொன்னார்
" வன்தொழுநோய் நீங்கிற்று எழுக।" வென்றார்
வந்தவனோ நோய்நீங்கி மகிழ்வுற் றானே। 87

அண்ணல்தான் அவனிடத்து ஒன்று சொல்வார்
' அவனியிலே யுள்ளோர்கள் அறியா வண்ணம்
பண்புடனே வீழிப்புடனே யிருப்பாய் யென்று
பக்குவமாய் எடுத்துரைத்து மேலும் சொல்வார்
என்றாலும் ஆசாரி தனக்கு மட்டும்
எடுத்துரைப்பாய் சாட்சியாக மோசே சொன்ன
மண்ணுலகில் காணிக்கைச் செலுத்து ' என்றார்
மாசிலா கண்மணியாம் அண்ணல் தானே . 88

(வேறு)

நூற்றுவர் தலைவனின் நம்பிக்கை

கப்பர் நாகுமில் கர்த்த ரிருந்தார்
அப்போ தங்கே ஒருவன் வந்து
"அற்புதம் செய்யும் ஆண்டவர் நீயே – நும்
பொற்பதம் தொட்டேன் நூற்றுவர் தலைவன்
எந்தன் இல்லத்தில் பணியாள் தானே
நொந்து கிடக்கிறான் வாத நோயால்
அந்தமில் சுடரே! அருளின் திருவே!
சிந்தை கொண்டே சுகமாய்ச் செய்வீர்" 89
என்றே வேண்டினான் இறங்கிய குரலில்
" நன்றே நாமும் வருவோ மாங்கே
நலமாய் ஆக்குவோம் " என்றார் யேசு
மறுமொழி பகர்வான் மனிதனும் மகிழ்ந்தே!
" என்மொழி கேட்க ஏவ லர்களோ
எண்ணி லடங்கார் உண்டே யாயினும்
தங்களை யழைக்கும் தகுதியெனக் கில்லை
உங்களின் முன்னால் தாழ்ந்தவன் நானே 91

இங்கே யிருந்து ஒருசொல் மொழியின்
அங்கே உண்மையில் அற்புதம் நிகழுமே ।"
இல்லத்தி லிருப்போன் எழுந்து நடப்பான் – உங்கள்
வல்ல மையால் । வணங்கு கின்றேன்
நம்பிக்கை வைத்த தலைவனை யெண்ணி
எம்பிரான் தானும் மகிழ்ந்து கூறுவார்
இப்படிப் பட்ட உண்மை யாளனைத்
தப்பேது மில்லா இசுர வேலரில் 91

எப்போதும் நானும் கண்டது மில்லை – என
ஒப்புதல் அளித்தார் உலகின் முதல்வரே ।

மேலு முரைப்பார் வீந்தை குமாரன்
நாலுமு ணர்ந்த நந்தா வீளக்கம்
" மேற்கு கிழக்கு திக்கி லிருந்து
ஆர்க்கும் விண்ணில் ஆபி ரகாமும்
நன்றாய் ஈசாக் யாக்கோ போடு
ஒன்றாய் அமர்ந்து விருந்துண் பாரே 92

அரசன் மக்களோ அவதி யுறுவர்
கருமை இருளில் தள்ளப் படுவர்
அழுகை பற்கடி அனைத்து மிருக்கும்
அழகின் திருமகன் மேலு மங்கே
வேண்டிய படியே எல்லாம் நடக்கும்
விரைந்திடு வீடு நோக்கியே । என்றார்
ஆண்டவர் வாழ்த்திய வண்ணம் பணியாள்
அந்நொடிப் பொழுதில் நலமா னானே 93

இயேசு பலரை நலமாக்கல்

பேதுருவின் மாமியாரின் காய்ச்சல் நீக்கி
பேய்பிடித்த மனிதரெல்லாம் மகிழும் வண்ணம்
தீதறியா கட்டளையால் துரத்தி விட்டார் - பேய்கள்
சென்றவிடம் தெரியாது விலகிற் றன்றோ ।
மூதறிஞர் ஏசாயா மொழிந்த வண்ணம்
முழுமையாய் தம்நோயை ஏற்றுக் கொண்டு
கோதில்லா நல்லோராம் இயேசு வள்ளல்
குவலயத்தின் நோயெல்லாம் போக்கி னாரே । 94

இயேசுவைப் பின்பற்றுதலின் நற்பலன்

இக்கரையில் சூழ்ந்திருந்த மக்கள் கண்டு
எழில்மகனார் கட்டளையோ யிட்டு விட்டார்
அக்கரைக்குச் செல்கவென்றே ஆங்கு நின்ற
ஆழ்மறை வல்லோனோ கரங்கு வித்து
எக்கரைக்குச் சென்றாலும் தொடர்ந்து நானும்
என்னுயிரே உம்பின்னால் வருவேன் என்றான்
தக்கப்படி யேசுபிரான் சொன்ன வண்ணம்
தாழ்மையுடன் அவர்கள்தாம் பின்சென் றாரே । 96

"நரிகளுக்குக் குழியுண்டு பதுங்கிக் கொள்ள
நலமான கூடுகளோ பறவைக் குண்டு
புரிந்துகொள்வீர் உலகத்தீரே தேவ மைந்தன்
புவிமீது தலைசாய்க்க இடமே யில்லை" - என
விரிவாக உரையாற்றுங் காலை யங்கே
வணங்கிநின்று ஒருசீடன் கேட்க லுற்றான்
'விரைவாகச் செல்லவேண்டும் தந்தை தன்னை
மண்ணில்தான் அடக்கந்தான் செய்ய' வென்றான். 97

அருள்நதியை பிரசவிக்கும் அன்பின் குன்றம்
அகிலத்தின் பேரொளியு மங்கே சொல்வார்
மருளவேண்டாம் என்னுரையைக் கேட்பாய் நீயே
மறைந்தோர்கள் மறைந்தோரை அடக்கம் செய்வர்.
திரளாக வருகின்ற மக்க ளோடு
தொடர்ந்தேநீ என்பின்னே வருக வென்றார்
கரங்களாகும் சீடர்கள்தாம் சொற்க ளேற்றே
கண்மணியின் பின்னாலே தொடர்ந்து சென்றார். 98

கடல் கொந்தளிப்பை அமைதியாக்கல்

அக்கரையைக் கடப்பதற்குப் படகி லேறி
அனைவருமே பயணமானார் யேசு வோடு
திக்கறியா வீதத்தினிலே மேகக் கூட்டம்
திகைத்திடவே வைத்துவிடும் சூறைக் காற்று
பக்குவமாய் படகுதனைச் சூழ்ந்து கொள்ள
பேரச்சம் கொண்டார்கள் சீட ரெல்லாம்
முக்காலம் உணர்த்துகின்ற தேவ மைந்தன்
மெய்யுறக்கம் கொண்டிருந்தார் அந்நே ரத்தில் 99

எங்களைநீ காப்பாற்றும் இறைவா வென்று
இனிபிழையோம் என்றோசை எழுப்பி னார்கள்
பொங்குகின்ற சினத்துடனே ஆங்கு ரைப்பார்
பொய்யான பற்றென்றும் வேண்டா மென்றே
தங்குதடை யில்லாத காற்றை, கடலைத்
தானாணை பிறப்பித்தே அடங்கச் சொன்னார்
அங்கெழுந்த பேரலையும் சுழலும் காற்றும்
அடங்கியதே । சீடர்கள்தான் வியந்து போனார். 100

கரையேறி கெர்கசேனர் சென்ற போது
கரியநிற பேய்பிடித்த இருவரங்கே – கல்
அறையிருந்து வெளியேறி எதிரே வந்தார்
கண்டுவிட்ட மனிதரெல்லாம் அஞ்சி விட்டார்
தெருவினிலே நடப்பதற்குத் துணிய வில்லை
துயர்கொடுக்கும் கொடும்பேய்கள் என்ப தாலே
அருள்விழியார் அண்ணலங்கே வருதல் கண்டே
அடங்கினவே அப்பேய்கள் நடுக்கங் கொண்டே । 101

பேய் பிடித்த இருவரை நலமாக்கல்

மாரியன்ன கருணையாகும் தேவ மைந்த
வையத்தை வாழ்விக்க வந்த தேவே!
பாரினிலே காலந்தான் முடியு முன்னே
பயமுறுத்தி வேதனைதான் கொடுக்க லாமோ
நேரினிலே தெரிகின்ற பன்றிக் கூட்டம்
நெருங்கித்தான் வருகிறதே அக்கூட் டத்தில்
ஊரறிய துரத்திவிடும் நாங்கள் செல்வோம்
உத்திரவு கொடுத்திடுங்கள் என்றே வேண்ட 102

போங்களென்றே பேய்களுக்கு ஆணை யிட்டார்
புறப்பட்ட பெரும்பேய்கள் சேர்ந்து கொள்ள
ஆங்கிருந்த பன்றிகள்தான் அலறிக் கொண்டே
அருகிருந்த மேடிருந்து கடலில் வீழ
பாங்காகப் பார்த்திருந்த பட்ட ணத்தார்
பறைசாற்றி விட்டார்கள் செய்தி கேட்டோர்
தீங்கழிக்கும் யேசுபிரான் முன்னே வந்து
திகிலடைந்து ஊர்நீங்கிப் போகச் சொன்னார். 103

வேண்டுகோளை ஏற்றிட்ட விண்ணின் மன்னர்
மீண்டுந்தான் தன்னூர்க்குப் பயண மானார்
ஆண்டுகண்டார் முடக்குவாத முற்றோன் தன்னை
அப்போதே குணமாக்கி மகிழ்வு தந்தார்
மூண்டிருந்த துயர்மேகம் விலகிப் போக
மகனேநீ துணிவோடு இருக்க வேண்டும்
தீண்டிவிடும் பாவத்திற்கு மன்னிப் புண்டு
திகையாதே மயங்காதே செல்க வென்றார். 104

அப்பொழுது ஆங்கிருந்த மறைநூல் வல்லார்
அய்யய்யோ இவனென்ன தெய்வம் தன்னை
முப்பொழுதும் நிந்தனைதான் செய்கின் றானே – என
மனத்தாலே நினைத்தார்கள் உணர்ந்த அண்ணல்
" எப்பொழுதும் தீயவற்றை எண்ண லாமோ
எழுந்துநட என்பதுவோ பாவ மெல்லாம்
இப்பொழுதே மன்னிக்கப் பட்ட தென்று
இயம்புவதோ எதுவெளிது " சொல்வீ ரென்றார். 105

முடக்குவாதமுள்ளோனை நலமாக்கல்

மிடுக்காக முடக்குவாத முற்றோன் நோக்கி
மனுமைந்தன் செப்புகின்றார் எழுந்து உந்தன்
படுக்கையைச் சுருட்டுகநீ இல்லம் ஏகு
பாரினிலே எனக்குள்ள அதிகாரம் ஈது
இடுக்கண்ணைக் களைவதற்கு உரிமை யுண்டு – நீங்கள்
எல்லோர்க்கும் இயம்பவேண்டும் இதனை யென்றார்
அடுக்காக நற்செயல்கள் புரிவு தற்கு
'அதிகார மளித்தவனை' வாழ்த்தி னாரே. 106

மத்தேயுவை அழைத்தல்

விந்தை செய்த நந்தா விளக்கம்
அந்த இடத்தை விட்டே யகன்று
ஆயத் துறைக்குச் சென்றார் ஆங்கு
தூய மத்தேயு என்பாரைக் கண்டு
"இக்கணம் என்னுடன் வாவெனப்" பணிக்க
அக்கணம் மறுமொழி அறியா மத்தேயு
சட்டென அவர்பின் எழுந்தே நடந்தார்
பிந்தி மத்தேயு இல்லம் ஏகினார்.
பந்தியில் அமர்ந்தார் பாவி களோடு
ஆயக் காரரும் அவருடன் உண்டனர்
மாய பரிசேயர் கண்டனர் அதனை
கொண்டனர் வெகுளி குதித்தனர் அவரோ
பாவி களோடும் பரதவரோடும் – அருள்
மேவிய போதகர் மேதகு வள்ளல்
பந்தியில் ஒன்றாய் அமர்வது முறையோ
விந்தை யல்லவே உண்பது என்றனர்

ஆய முதல்வன் கேட்டார் அதனை
நோயினைப் பெற்ற நலிந்தோர் தமக்கே
மருத்துவம் தேவை நோயிலார்க் கில்லை
உறுத்தும் பலியை என்றும் வேண்டேன்
இரக்கம் மட்டுமே விழைவது நானே !
கருத்தை உணர்ந்து மனத்தை திருத்துவீர்
நீதி மான்களை நேரிய மாந்தரை
கூவி அழைத்திட நான்வர வில்லை
மீதி யின்றியே திருத்துவேன் என்றார்
வீதி யிலுள்ள பாவிகள் தமையே. 108

உண்ணா நிலை எப்போது

யோவான் சீடர் நெருங்கி வந்தே
நாயகன் நோக்கி வினவு கின்றனர்
" பரிசே யருடன் நெறிபிற ழாமல்
சரிசம மாகவும் மிகுதி யாகவும்
நோன்புதான் இருப்பது எங்கள் வழக்கம்
ஏனிலை உங்கட்கு அந்தப் பழக்கம் "
" மணமகன் தம்மொடு இருந்திடும் போதில்
மனத்தில் வருத்தம் தோழர்க்கு வருமோ !
அம்மகன் பிரியும் நாளும் வந்திடும்
அந்த நாட்களே நோன்புறு நாட்கள்.

புதிதாய் நெய்த ஆடையை ஒருவன்
பழைய துணியுடன் இணைத்திட மாட்டான் – இணைப்பின்
பழையதும் கிழியும் பலவா றாக
கிழிசல் அதிலே கணக்கிருக் காதே

பழைய துருத்தியில் திராட்சை மதுவை
புதிதாய் நிரப்பி வைத்தால் ஐயோ
துருத்தியும் வெடிக்கும் மதுவும் சிந்தும்
புதிய மதுவை புதிய துருத்தியில்
பொருத்தமாய் நிரப்பின் துருத்தி கெடாது
நாற்றமு மில்லை நல்மது கெடாது
ஆற்றினேன் அறிவீர் நீர்தன் பொருளே !

மகளை இழந்த தந்தை எதிர்ப்பாடல்

உரைக ளிவ்வாறு நிகழ்த்திடும் போதில்
முறையாய்ப் பணிந்து ஆங்கொரு தலைவன்
" கண்மணி யனைய என்மகள் ஐயோ
பொன்மணிச் செல்வம் பிரிந்து விட்டாளே
என்னசெய ஐய என்னொடு வருவீர்
கண்செய் புண்ணியம் தங்களைக் கண்டது
கடிதே வந்தென் மகள்மேல் கைவை
சடுதியி லவளோ உயிருடன் எழுவாள்
என்று இறைஞ்சி நின்ற ஞான்று
நன்று சீடரே । புறப்படு வோமென
சென்றார் செம்மல் தலைவ னுடனே ।

பெரும்பாடுற்ற பெண் நலமாதல்

பன்னீ ராண்டு பெரும்பா டுற்றவள்
செந்நீர் மல்க துயர்பல கண்டவள்
கண்ணீ ரோடு கலங்கி நின்றவள்
தண்மதி யேசு வருவதைக் கண்டு – தங்கள்
" பொன்னிறப் போர்வை விளிம்பினைத் தொட்டால்
எந்நோய் நீங்கும் ஏந்தலே " என்றாள்
என்றவள் ஆங்கு அருகினில் சென்றாள்
நின்றவர் போர்வை விளிம்பினைத் தொட்டாள்
தொடுவதை உணர்ந்த சீர்மிகு வள்ளல்
" அடுவது துயரம் அல்ல " என்றார்
கனிவாய் பெய்த கருணை மழையால்
பிணிவாய் மூட பெண்நல மானாள்.

சிறுமி உயிர்த்தெழல்

தாரை ஓசை தப்பட்டை யோசை
ஊரே கூடி எழுப்பிடும் அழுகை
யார்முகம் காணினும் துயரின் ரேகை
சந்தடி எழுப்பிடும் இந்த வேளை
அந்தமில் நாதர் ஆங்கு வந்தே
“ விலகிநில் லுங்கள் வீணாய் யாருமே
கலங்கிட வேண்டாம் கன்னிப் பெண்ணோ
இறந்திட வில்லை உறக்கத் திலுள்ளாள் – அருள்
சுரந்திடும் தேவனின் சொற்களைக் கேட்டோர்
ஏளனம் செய்தனர் எக்காள மிட்டனர்
ஆளுக் கொன்றாய் சுட்டனர் சொற்களால்

கூட்டமாய் நின்ற கும்பலை விலக்கி
வாட்டமா யிருந்த சிறுமியின் கரத்தைப்
பற்றினார் உடனே பாவை எழுந்தாள்
பெற்றவர் மற்றவர் மகிழ்ந்தா ரனைவரும்
பற்றியது செய்தியே தேச மெங்குமே । 114

(வேறு)

பார்வையற்றோர்க்குப் பார்வை

கண்ணொளியை யிழந்திட்ட இருவர் வந்தார்
கருணையாம் வள்ளலைத் தேடி நின்றார்
விண்ணொளியே எங்களுக்குப் பார்வை வேண்டும்
வேண்டிநின்றோம் வல்லமைதான் உண்டென் றார்கள்
தண்ணொளியாம் யேசுபிரான் கண்கள் தொட்டார் – குருடர்
தரணிதனைப் பார்க்கின்ற பேறு பெற்றார்
இன்னொளியாம் எம்மானோ கண்கள் தந்து
இங்கேயோர் விந்தையினைக் காட்டி னாரே 115

ஊமை பேசுதல்

பேய்பிடித்த ஊமையைக் கொண்டு வந்தார்
பிணிபோக்கும் அத்தன்முன் நிறுத்தி நின்றார்
வாய்பேசு மளவிற்குப் பேய்து ரத்தி
மக்களின் வாழ்த்தினையே பெற்றார் செம்மல்
பேய்கள்தம் தலைவனையே கொண்டு யேசு
பேய்களையே துரத்துகின்றார் என்றார் சேயர்
மாயங்க ளிவ்வாறு நடந்த தென்ற
மாநகர இசுரயேலில் வரலா றில்லை । 116

(வேறு)

அறுவடை மிகுதி ஆட்கள் குறைவு

சிற்றூர் பேரூர் அனைத்து ஊரிலும்
சுற்றி நடந்தார் சொற்பொழி வாற்றினார்
விண்ணவ ரரசின் வியத்தகு செய்தியை
மன்றங் கள்தொறும் முழங்கினார் முதல்வர்
மக்களின் பிணிகள் அனைத்தும் நீக்கி
அக்கண மாங்கே குணமாக் கினாரே
தூயவர் மக்கள் துயரினைக் கண்டு
“ ஆய னிலாத ஆடு ” களென்றார்
உய்யும் வழியை அறியா மக்கள்
தொய்வுடன் இருப்பதை யறிந்து செப்புவார்
“ அறுவடை மிகுதி ஆட்களோ குறைவு
நிறைவுடன் பணிகள் நடந்திட வேண்டின்
அறுவடை செய்ய ஆட்களை அனுப்ப
முறையுடன் வேண்டிக் கொள்வீர் என்றார் । 117

திருத்தூதுப் பொழிவு (பன்னிரு திருத்தூதர்)

பன்னிரு அடியார் தம்மை அழைத்தார்
பொன்திரு மேனியன் புவியின் நாயகன்
வன்நோய் நீக்கவும் ஆவிகள் ஓட்டவும்
விண்மக னவரோ அதிகா ரமளித்தார்
அந்தப் பன்னிரு அடியார் பட்டியல்
இந்தப் படிதான் இருந்தது காணீர்
பேதுரு என்னும் சீமோன் அவன்தன்
தீதிலா சகோதரன் அந்தி ரேயா । 118

ஆக்கம் நிறைந்த செபதே யுமகனாம்
யாக்கோ போடு யோவான் மற்றும்
பிலிப்புடன் பர்த்த லமேயு தோமா
களிப்புடன் இணைந்த மத்தேயு நல்லோன்
அல்லவை அறியா அல்பேயு தோன்றல்
நல்லவன் இன்னோர் யாக்கோப் தானாம்
தன்மை மிக்க ததேயு இவருடன்
கானான் தேசத்து சீமோ னோடு
வானும் மண்ணும் வணங்கும் அண்ணலை
நாண மின்றியே காட்டிக் கொடுத்த
ஈனன் யூதாஸ் காரியத் தானே । 119

(வேறு)

பன்னிருவருக்கு அறிவுரை

புறவினத்தார் நாடுநோக்கிச் செல்ல வேண்டாம்
போகவேண்டாம் சமாரியர்தம் நகருக் குள்ளே
அறம்விளங்கு இசுரயேலை அடைந்தி டுங்கள்
ஆடுகள்தான் அவர்கள்தான் மெய்யே । மெய்யே ।
குறைவில்லா விண்ணரசு நெருங்கிற் றென்று
குரலெழுப்பி உரைத்திடுங்கள் மேலும் நீங்கள்
நிறைவுடனே நற்பணியை யாற்றி டுங்கள்
நோய்களையே குணமாக்கி நன்மை செய்வீர். 120

அழுகைக்குக் காரணத்தை அறிந்து கொள்வீர்
அதைநீக்க என்றென்றும் உழைத்தி டுங்கள்
தொழுநோயால் வாடுவோரை நலமாக் குங்கள்
சாக்காட்டைத் தழுவியோரை எழுப்பி டுங்கள்
பிழைசெய்யும் பேய்களையே துறத்தி டுங்கள்
பெற்றீர்கள் கொடையாக அவற்றை யெல்லாம்
மழைபோலே மனங்கொண்டு மக்காள் நீங்கள்
மயங்காது இலவசமாய் அளிப்பி ரென்றார். 121

(வேறு)

கச்சையில் பொன்னும் வேண்டாம்
கருத்தோடு ஏற்பீர் நன்றே
இச்சையாய் வெள்ளி செம்பும்
எப்போதும் வேண்டாம் வேண்டாம்
பையிலே அங்கி வேண்டாம்
பாதணி எதுவும் வேண்டாம்
கையிலே தடியும் வேண்டாம்
கருத்திலே கொள்ள வேண்டும்
மெய்யாய் கூறு கின்றேன் – வழிப்
பயணம் செல்லும் போதில்
பொய்யா தேற்றுக் கொள்வீர்
பொன்னான தூது வர்காள்
பணியாள் உணவுக் காகப் 122
பாத்திரன் உண்மை என்றார்
நாத்திறன் மிக்க நல்லோர்

(வேறு)

பேரூர் என்றோ சிற்றூர் என்றோ
யாரூர் நீங்கள் சென்ற போதும்
தகுதி யுடையோன் யாரென அறிந்து
மிகுதியாய் வாழ்த்தி யவரது வீட்டில்
தங்குவீர் புறப்பட பலநாள் செலினும்

உங்கள் சொல்லை ஏற்பவர் எவரோ
அவரது இல்லம் ஏகுவீர் நீங்கள்
அந்த வீல்லமோ அதிகம் வளர
சிந்தை குளிர வாழ்த்துவீர் நன்று
தகுதி யாயின் சமாதா னந்தான்
மிகுதி யுடனே அவர்களைச் சாரும்
தகுதி யில்லை அன்னவர்க் காகில்
திரும்ப வருமே தெரிவீர் சீடரே !

மதியா தாரின் இல்லம் வீட்டு
தெரியா தாரின் பட்டணம் வீட்டு
புறப்படு முன்னர் ஒன்று செய்வீர் – கால்
அடிபடு தூசினை தட்டியே வீட்டு
மேலும் நடத்தலே மேலாம் உணர்க ! 122
சோதாம் கொமாரப் பட்டணம் போலே
இறுதிநாள் தீர்ப்பில் நிகழ்வு யாதெனில்
உறுதியே அழிவு உண்மை யிதுவே
அவர்களின் அழிவு ஒப்பு நோக்கின்
அதனினும் கடுமை அறிவீ" ரென்றார்

(வேறு)

ஓநாய்களிடையே ஆடுகள்

"ஆடுகளை ஓநாய்கள் நடுவே நானும்
அனுப்புகிறேன் அதுதான் உண்மை நீங்கள்
பாடுகள்தான் எத்தனைதான் பட்ட போதும்
பாம்புகள்போல் வினாவுடனே இருத்தல் வேண்டும் – அமைதி
நாடுகிற புறாக்களாய் நாளும் நீங்கள்
நல்லமனம் கொண்டவராய் வாழ்ந்தி டுங்கள்
தேடுகின்ற மனிதரிடம் உங்க ளுக்கோர்
தெளிவான எச்சரிக்கை வேண்டு மன்றோ !

சங்கத்தில் நிறுத்துவார்கள் தயவு மின்றி
சாட்டையால் அடிப்பார்கள் மன்றம் தன்னில்
அங்கந்தான் பதைத்திடவே ஒப்புக் கொடுத்தே
அரசர்கள் ஆளுநர்கள் முன்னி றுத்தி
பங்கந்தான் செய்திடுவார் பயமே வேண்டாம்
பகர்ந்திடவே மொழியிலையோ அஞ்ச வேண்டாம்
உங்களுக்காய் உரைப்பதற்கு அருள்பி றக்கும்
உரைப்பதுவோ நீங்களல்ல ஆவி தானே ।

உடன்பிறந்தான் உடன்பிறந்தான் தன்னை மற்றும்
உற்றதந்தை பெற்றெடுத்த பிள்ளை தம்மை
உடனேதான் மரணத்தை தழுவு தற்கு
ஒப்புதான் கொடுப்பாரே மாறு பட்டு
திடமாக பெற்றவரைக் கொலையும் செய்வார்
தீங்கென்று யிவற்றையே எண்ண மாட்டார்
அடலேறு உள்ளங்காள் என்னால் நீங்கள்
அனைவர்க்கும் பகையாவீர் பாவம் ஐயோ ।" 125

இறுதி நாளில் நிலைத்திருந்தால் மீட்ப துண்மை
ஒருநகரில் துன்புறுத்தப் பட்டால் நீங்கள்
உறுதியாக அங்கிருந்து சென்றி டுங்கள்
உண்மையிது ஒருபோதும் மறக்க வேண்டாம் – இளம்
பரிதியான மனுமகனோ வருவ தற்குள்
பெருநகராம் இசுரயேலைச் சுற்று தற்கே
ஒருபோதும் முடியாது ஓடிப் போங்கள்
உலகத்தை நன்றாகப் புரிந்து கொள்வீர். 126

மாணாக்கன் ஆசானில் பெரியோ னில்லை
பணியாளன் தலைவனினும் பெரியோ னில்லை
தேனாக யெண்ணியேதான் இந்நாள் வரையில்
தலைவனாய் ஆசானாய் இருந்தீர் போதும்
ஏன்நீங்கள் உணரவில்லை பெயல்செ பூலே
என்றேதான் தலைவரையே ஏசி னார்கள்
காண்நீங்கள் அவ்வில்லத் தாரை ஐயோ
கட்டாயம் பேசுவது உறுதி யன்றோ ।" 127

அஞ்சாதீர்கள்

"களிகூர்ந்து யிவ்வாறு கழல்வோர்க் கெல்லாம்
கட்டாயம் அஞ்சிடவே வேண்டாம் வேண்டாம்
வெளியாக்கப் படாததெந்தப் பொருளு மில்லை
வையகத்தார் அறியாத தேது மில்லை
ஒளியில்தான் செப்பிடுங்கள் உலக முய்ய
உங்களுக்கு இருளில்நான் சொல்லும் கூற்றை
அளிக்கின்றேன் செவிமடுப்பீர் எடுத்துச் சொல்வீர்
அனைவர்தம் இல்லங்கள் பெருமை கொள்ளும் ।" 128

(வேறு)

"காதொடு காதாய்க் கேட்குமென் செய்தியைக்
தோதாய்ச் செப்புவீர் மேல்தள மேறி
அழிக்க முடியா ஆன்மா தன்னை
அழிக்க வல்லவ ரவர்க்கே யன்றி
அழியு முடலை மட்டு மழிக்கும்
பழியறி மாந்தர் தம்மைக் கண்டு
வீழியறி அச்சம் கொண்டிட வேண்டாம்
ஒழிந்த ஆன்மா உடலிரண் டையும்
நரகவன் னிருளில் அழிப்பவ ரெவரோ—அப்
பரமனுக் கன்றி யார்க்கும் நீங்கள்
அஞ்சிடல் வேண்டாம் அறைவேன் நானே । 129

காசுக் கிரண்டு சிட்டுக் குருவிகள்
ஆசையில் விற்பதை யறிவோம் நாமும்
ஆயினு மொன்று உறுதியே பகர்வேன்
தூயவன் விருப்ப மில்லை யெனிலோ
தரையில் குருவிகள் வீழ்வ தில்லையே
உரையின் கருத்தை உணர்ந்து கொள்வீர்
உங்கள் தலையின் ஒவ்வொரு மயிரும்
எங்கோ என்றோ எண்ணப் படுதே
இச்செக மக்காள் இதனை யறிவீர்
அடைக்கலான் குருவிகள் தம்மைக் காட்டிலும்
படைக்கப் பட்டீரே நீங்கள் 'மேலாய்." 130

மக்கள் முன்னிலையில் கிறித்துவை ஏற்றுக் கொள்ளுதல்

தானிடர் பட்டாலும் மானிடர் முன்னால்
தானே சென்றென் பெருமை சொல்பவன்
விண்ண ரசிலே என்னுட னிருக்கும்
கண்மணி தந்தை அறியும் வண்ணம்
அறிவிக்கப் படுவான் அவனே சிறந்தோன்
மறுதலிப் பவனெனில் அய்யோ பாவம்
மறுமொழி யின்றியே தந்தை முன்னால்
மறுதலிக் கப்படுதல் முழுதும் சரியே । 131

(வேறு)

பிளவு ஏற்படுதல்

நிலத்தினிலே நிலையான அன்பு தன்னை
நிலைபெறவே செய்திடநான் வந்தே னில்லை
கலகத்தை விளைவிக்கும் நீள்வா ளதனை
கட்டாயம் அனுப்பிடவே வந்தேன் என்பேன்
நலமொன்றே நாடுகின்ற தந்தை தானும்
மகனோடு வேறுபட வழியும் செய்வேன்
நிலமகளின் பண்புகொண்ட அன்னை கூட
நன்மகனைப் பிரிவுகொள்ளச் செய்ய வந்தேன் 132

மாமிகளோ மருமகளை பிரிந்து வாழ
வையகத்தில் என்றென்றும் வழிவ குப்பேன்
ஆமிதனைக் கூறுகின்றேன் அன்பின் மக்காள்
அவனவன் பகைஞன்தான் அவனுக் குற்றோர்
பூமியிலே வாழ்வோரே । புரிந்து கொள்வீர்
பெற்றெடுத்தத் தாயாரைத் தந்தை மற்றும்
தாம்பெற்ற மக்களையே அன்பு செய்வோர்
தகுதியற்றோர் என்னருளைப் பெறுவ தற்கே । 133

என்னடியைப் பின்பற்றிச் சிலுவை தன்னை
எழிலாக சுமந்தேதான் வராது போனால்
எந்நாளும் என்னருளைப் பெறுவ தற்கு
எப்படித்தான் தகுதியாவீர் சொல்வீர் நீங்கள்
தன்னுயிரைக் காப்பவரோ யிழந்து போவார்
தரணியிலே எனக்காக தயங்கி டாமல்
இன்னுயிரை ஈபவரோ அதனைக் காப்பர் 134

கைம்மாறு பெறுதல்

உள்ளத்தில் உங்களை ஏற்றுக் கொள்வோர்
உளமார என்னையும் ஏற்றுக் கொள்வார்
கள்ளமின்றி என்னையே ஏற்றுக் கொண்டோர்
கடவுளாம் என்பிதாவை ஏற்றுக் கொண்டார்
நல்லறத்தின் திருவுருவாய் விளங்கு கின்ற
நலமான இறைவாக்கார் தம்மை ஏற்போர்
சொல்லறியா பயன்களையே அவர டைவார்
நீதிமானை ஏற்பவர்க்கும் நன்மை யுண்டே. । 135

சீடனென்னும் சிறப்புதனைக் கொண்டோ னுக்கு
தயங்காது ஒருகுவளை தண்ணீர் மட்டும்
நாடியேதான் குடிப்பதற்கு அளிப்ப வன்தான்
நானிலத்தில் நற்பயனைப் பெறுத லுண்மை
சீடருக்குக் கட்டளையை யிட்ட பின்னர்
சிறப்பாகச் சொற்பொழிவு செய்வ தற்கே ।
பாடின்றி நெறிகளையே பரப்பச் சொல்லி
பண்பாளர் பயணமானார் ஆங்கி ருந்தே । 136

(வேறு)

விண்ணரசின் பின்னணியில் திருமுழுக்கு யோவான்

காவலி லிருந்த கனிவின் திருமகன்
யோவான் தானும் சீடரை யனுப்பி
யேசு பெருமான் செயல்கள் குறித்து
ஆசை புடனே அறிந்திட விழைந்து
சீடர் இருவரை யனுப்பியே வைத்தார்
சீலரின் வருகை தெரிந்து கொள்ளவே । 137

"பெருமக னாரே । பேரொளி அண்ணால்
திருச்செயல் கண்டே தெரிய விழைகிறேன்
வருபவர் தாங்கள் தானே திருவே' – என
உண்மை தெரிந்திட எமையு மனுப்பினார்
இன்னொரு வ்ரையாம் எதிர்பார்க் கலாமா?
என்பதை யறிய அருளும் தேவே ।
மன்பதை போற்றும் மாசிலா விளக்கே" । என
கண்மலர் யோவான் கேட்டு அனுப்பவே 138

பொன்மக னாங்கு பகருவார் விடைதான்
நன்மகன் யோவான் சீடரை நோக்கியே
நன்று நீங்கள் சென்று செப்புவீர்
இன்று காண்பன கேட்பன வெல்லாம்
குருடர் பார்க்கவும் செவிடர் கேட்கவும்
குறையுடல் கொண்டோ ரெழுந்து நடக்கவும்
இடர்படு தொழுநோ யாளி தாமோ
நிறைவுடன் நலமே ஈண்ட றிவீரே ।
காது கேளார் கேட்கிறா ரன்றோ
மரித்தவர் உயிர்த்தெழல் மாச்செயல் பிறவும்
திருத்தவச் செல்வர் செய்வதை யறிந்தீர் 139
ஆழ மான நற்செய் தியாவும்
ஏழை களுக்கா யுரைப்பதை பாரீர்
மயக்க மின்றியே எனையே ஏற்பீர்
வைய மதிலே பேறுபெற் றீரே । 139

இயேசுவும் திருமுழுக்கு யோவானும்

யோவானின் சீடரோ சென்றாரே
இயேசுவோ கூட்டத்தில் நின்றாரே
'ஆமாம் செப்புவீர் மக்களே யோவான்
தூயவர் பற்றியே கேட்கிறேன்
பாலை நிலத்திற்குச் சென்றீரே । ஆங்கு
பாங்குடன் என்னத்தைக் கண்டீரோ ?
காற்றினி லாடிடும் நாணலா
கட்டாயம் இப்போது சொல்லுவீர்
பொலிவான மெல்லிய ஆடையில்
புதுமை மனிதரைக் கண்டீரா?
மெல்லிய ஆடை யுடுப்பவர்
மாளிகை வாசிகள் உண்மையே
வானினும் உயர்இறை வாக்கினர்
வையத்தில் உயர்ந்தவ ராவரே
அவரினும் மேலான ஒருவரை
அங்குதான் கண்டீ' ரென்றாரே । 1

(வேறு)

கருணை வடிவாம் கர்த்த ருரைப்பார்
"திருவருள் மிக்க தூதுவ னொருவனை
உனக்கு முன்னால் அனுப்பவே னறிக - வழியை
பிணக்கு களின்றி செம்மை யாக்குவார்
மறைநூல் கூறும் மாமணி யிவரே
இறையருள் நிறைந்த ஏந்த லுமிவரே
மனிதராய்ப் பிறந்து சிறந்தோ ருள்ளும்
இனிய உள்ளமும் ஏற்றமும் கொண்ட
வணங்கத் தக்க யோவான் தானே ।
மணங்கமழ் புகழுக் குரியோ ரன்றோ
விண்ண ரசிலோ வீதியோ யாதெனில்
சின்ன வரென்போர் பெரியோ ராவார் । 2

(வேறு)

யோவானின் காலமுதல் இந்நாள் வரையில்
இறையரசின் செயல்பாடு வல்ல மையே
தேவர்மீது ஆர்வமுள்ள அனைவ ரும்மே
தயங்காது கைப்பற்றி மகிழ்கின் றாரே ।
மேவியநல் திருச்சட்டம் திரும றைகள்
மேன்மையாம் யோவானும் வரும்வ ரையில்
ஆவிபோலே இறைவாக் குக் ரைக்ககண்டோம்
எலியாவாய் ஏற்றிடுவீர் என்சொல் கேட்பீர்

" சந்தையில் அமர்ந்திட்டு செஞ்சொற் கொண்டு
தென்றலாக அழைத்திட்டோம் தோழர் உம்மை
சிந்தையை மயக்குகின்ற குழலெ டுத்து
தேனான இசையெழுப்பி மகிழ்வு கொண்டோம்
விந்தையார் நீங்கள்தான் ஆட வில்லை
மனம்பதறி ஒப்பாரி வைத்த போதும்
நொந்துமிக மாரடித்துப் புலம்ப வில்லை – என
நவில்வோரோ சிறுவர்தான் ஐய மில்லை "

புவிமீது யோவான்தான் வந்த போது
புசிக்கவில்லை குடிக்கவில்லை அதனா லவரை
செவிக்கிழிய செப்பினரே பேய்தா னென்றே ।
செம்மல்நான் மனுமைந்தன் வந்த போதோ
தவியாது உண்கின்றான் குடிக்கின் றானே
தண்டுவோர்க்கும் பாவிகட்கும் நண்ப ரென்றார்
அவியாத ஞானந்தான் மெய்தா னென்றே
அதையேற்றுக் கொண்டோரின் செயலே யென்றார் " 3

மனமாற்ற மடையாத நகரைக் கேடுசூழும்

வல்லச் செயல்கள் பற்பல நிகழ்த்தியும்
சொல்லிடக் கூசிடும் சிற்சில நகர்கள்
திருந்திட வில்லை செம்மலின் பெருமை
அறிந்திட வில்லை அதனா லவரோ
கடுஞ்சின முற்று கடிந்திட முனைந்தார்
“கெடுதி சூழுமே கொரா சின்னே ।
அத்தனின் வல்லமை யறியா பெத்சா
சித்தம் கலங்கிட கேடு சூழுமே ।

‘ தீரும் சீதோன் பட்டணங் களுக்கு
நேரிய நன்செயல் செய்திருந் தாலோ
சீர்மிகு மக்கள் சாக்கை யுடுத்தி
ஆர்வங் கொண்டு சாம்பல் பூசுவர்
யாரும் போற்றிட மனமு மாறி
பாரினி லுயர்ந்து புகழ்பெற் றிருப்பரே ।
தீர்ப்பு நாளிலே தீரு நகர்க்கும்
ஆர்ப்பரிப் புள்ள சீதோன் தனக்கும்
அளித்திடும் ஒறுத்தல் பெரிதே யானால்
அதனினும் பெரிதே உங்களுக்” கென்றார் 4

“கப்பர் நாகுமே । கப்பர் நாகுமே ।
அப்ப னுறைந்திடும் வான மட்டுமே
தப்பா மல்நீ உயர்த லில்லை
செப்பு கின்றேன் சிந்தனை செய்க
ஆழ்த்திடும் பள்ள மதனில் வீழ்வாய்
தாழ்த்தப் படுவாய் தெரிந்துநீ கொள்க
உன்னில் செய்த நற்செயல் தாமே
இன்னல் நகராம் சோதாம் தன்னில்
செய்திருந் தாலோ அந்நகர் இன்றும்
பழுதறி யாமல் நிலைத்தி ருக்குமே 5
இறுதி நாளிலே கிடைக்கு மொறுத்தல்
உறுதி யாகுமே பலமடங் காக
தெரிதி சோதாம் நகர்க்கது குறைவே
உங்க ளுள்ளம் உணர்ந்திட நானும்
இங்கே யுரைத்தே னேற்பீ ரென்றார்

தந்தையும் மகனும்

" கருவீழியாம் என்தந்தை கருணை வள்ளல்
கவீனுலகைப் படைத்திட்ட அருளாம் தென்றல்
பெருமையாம் வீண்ணுக்கு மாங்க சையும்
பற்பலவாம் கோள்களுக்கும் இறையும் நீரே ।
அருமையாம் மண்ணுக்கும் அதிலே வாழும்
ஆருயிர்க்கும் ஆண்டவரே போற்று கின்றேன்
தருமத்தின் ஞானிகட்கே மறைத்து நீங்கள்
சிறுகுழந்தை யறிந்துகொள்ள செய்தீர் தேவே ।

என்தந்தை யெனையறிவார் பீன்யா ரறிவார்
எனையன்றித் தந்தையை யார்தா னறிவார்
என்னிடத்தில் எல்லாமும் ஒப்ப டைத்தார்
எந்தையீன் பேரருளை என்ன வென்பேன்
தன்னிடத்தில் வருகின்ற மக்க ளுக்கும்
தனயனுக்கும் வெளிப்படுத்த வீருப்பங் கொள்வார்
என்றும்பீற மக்களுமே யறிந்து கொள்ள
எப்போதும் வாய்ப்பீல்லை எனவாய் மலர்ந்தார்

இயேசு வள்ளல் தரும் இளைப்பாறல்

" பெருஞ்சுமையால் மீகவருந்தி சோர்ந்து போனீர்
பேரன்பீர் என்னிடத்தில் வாரீர் ! வாரீர் !
அருமருந்தாம் இளைப்பாறல் அளிப்பேன் நானே
அன்புண்டு கனிவுண்டு தாழ்மை யுண்டு
பெரு நுகத்தை யுங்கள்மே லேற்றுக் கொண்டு
புவீமீது என்னிடத்தில் கற்றுக் கொள்வீர்
அருளுண்டு உள்ளத்திற் காறுத லுண்டே
அந்நுகமோ அழுத்தாதே யெளிதென் றாரே !

இத்தனை வயது ஆன பின்னரும்
அத்தனாம் யேசுவை யறியா மகவாய்
சித்த மின்றியே யிருந்தேன் நானும்
முத்தாம் ஐயனைப் புரிந்துகொள் ளாமலே.

வேத முணர்ந்த என்துணை மார்த்தாள்
தீதறு செல்வன் அறிவொளி என்மகன்
கோதிலா இவர்தம் சொற்க ளேற்றே
ஆதவன் யேசு அருளடிப் பற்றினேன்.

கன்னல் உரைதான் கர்த்தரின் மொழிகள்
இன்னல் நீக்கிடும் எழில்நிறை வழிகள்
தென்றலின் இனிமை அங்கே இழையும்
திருமகன் பொழிவோ தேன்மழை யாகும்.

இருகரம் நீட்டி இன்முகங் காட்டி
அருள்விழி நோக்கில் ஆனந்தம் கூட்டி
வருகநீ மகனே என்ற வள்ளல்
வாரிக் கொண்டார் என்னை யணைத்தே.

வாழ்த்துங்கள்

வான்வெளியும் வெண்மதியும் கதிரும் காற்றும்
வற்றாத ஆறுகளும் மலையிம் காடும்
மீன்துள்ளும் கடற்பரப்பும் மாநி லத்தில்
வாழுகின்ற உயிரனைத்தும் வணங்கி நிற்கும்
மானுடத்தின் உயிர்மூச்சாம் யேசு வண்ணல்
மாப்புகழைப் பாடுதற்கு முனைந்து நின்றேன்
நானெடுத்தப் பணியினிலே குறைக ளென்றால்
நாட்டோரே மன்னித்து வாழ்த்து வீரே !

— ஆசிரியர்

ஆசிரியரின் பிற நூல்கள்

1. அடித்தளம் (கவிதை)
2. நெருப்பு வளையத்தில் . . . (கவிதை)
3. எமனுக்கு ஒரு சவால் (நாடகம்)